

# தமிழகப் புலவர்





2642



ஓரியன்ட் பப்ளிஷிங் கம்பெனி
சென்னை-1.

# முகவுரை

தமிழகப் புலவர் என்னும் பெயர் கொண்ட இச்சிறுநூல் ஆறும் வகுப்பிற்கு ஏற்ற துணைப்பாட நூலாகும். சங்ககாலம் முதல் நாம் வாழும் இக் காலம் வரையில் பல நூற்றாண்டுகளில் வாழ்ந்த பெரும் புலவர் பதின்மர் வரலாறுகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

கோவூர் கிழார், இளங்கோவடிகள், சாத்தனார், திருத்தக்க தேவர், சயங் கொண்டார், சேக்கிழார், கம்பர், உமறுப் புலவர், வீரமாமுனிவர், பாரதியார் ஆகிய பதின்மர் வரலாறுகள் இந்நூலில் கூறப் பட்டுள்ளன.

இவ்வரலாறுகள், மேல் வகுப்புக்களில் இப்புலவர்களின் செய்யுட்களைப் படிக்கச் சிறந்த அடிப்படையை அமைக்கும் என் பதில் ஐயமில்லை. இந்த வகையிலும் இது 'துணைப்பாட நூல்' என்பது பொருத்த மாகும்.

மா. இராசமாணிக்கனார்

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1. | கோவூர் கிழார் | ... | [illegible] |
| 2. | இளங்கோவடிகள் | ... | 10 |
| 3. | சாத்தனார் | ... | 18 |
| 4. | திருத்தக்க தேவர் | ... | 26 |
| 5. | சயங்கொண்டார் | ... | 36 |
| 6. | சேக்கிழார் | ... | 45 |
| 7. | கம்பர் | ... | 52 |
| 8. | உமறுப்புலவர் | ... | 60 |
| 9. | வீரமாமுனிவர் | ... | 68 |
| 10. | பாரதியார் | ... | 77 |

# 1. கோவூர் கிழார்

## கோவூர் கிழார்

கோவூர் என்பது சோழநாட்டு ஊர்களுள் ஒன்று. கிழார் என்பது பொதுவாக வேளாளரைக் குறிக்கும் சொல்லாகும். எனவே, கோவூர் கிழார் என்னும் தொடர், கோவூரில் பிறந்து வாழ்ந்த வேளாளரைக் குறிப்பதாகும். கோவூர் கிழார் என்பவர் இன்றைக்கு ஏறத்தாழ ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழகத்தில் வாழ்ந்தவர்.

## சங்க காலம்

இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன்பு பாண்டியர் என்பவர் மதுரையை ஆண்டனர். அவர்கள் அம்மாநகரில் தமிழ்ச் சங்கத்தை வைத்துப் புலவர் பலரை ஆதரித்தனர். அப்புலவர்கள் பல தமிழ்ப் பாடல்களையும் நூல்களையும் செய்தனர். இங்ஙனம் தமிழ்ச் சங்கம் இருந்த காலம் **சங்க காலம்** எனப்பட்டது. அக்காலத்தில் செய்யப்பட்ட புறநானூறு, அகநானூறு, தொல்காப்பியம், திருக்குறள் முதலிய நூல்கள் **சங்க நூல்கள்** எனப்பட்டன. சங்க காலம் என்பது ஏறத்தாழக் கி. மு. 300 முதல் கி. பி. 300 வரையில் என்று சொல்லலாம்.

## கல்விப் பயிற்சி

கோவூர் கிழார் தம் காலத்திலிருந்த தமிழ் இலக்கண நூல்களையும் தமிழ் இலக்கிய நூல்களை யும் தக்க ஆசிரியரிடம் பாடம் கேட்டார்; ஆசிரியு ரிடம் அடக்கம், பணிவு முதலிய நற்குணங்களுடன் நடந்துகொண்டார்; தம்முடன் படித்த மாணவர் களுடன் அன்புடன் பழகினார். அவர் பிறர் சண்டையிடுவதைக் காணப் பொறார்; உடனே சென்று அவர்களை அமைதிப்படுத்துவார். அவர் ஏழை மக்களிடம் மிகுந்த அன்பு காட்டினார்; எப் பொழுதும் இனிய சொற்களையே பேசி வந்தார். இந்த நல்லியல்புகளால் அவர் கோவூர் மக்களால் பாராட்டப்பட்டார்.

## புலவரும் நலங்கிள்ளியும்

நலங்கிள்ளி என்பவன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டை ஆண்டுவந்தான். அவன் தமிழில் புலமை பெற்றவன்; கவிபாடும் திறமை பெற்றவன் அவன் தன் குடிகளைக் கண்ணும் கருத்துமாகக் காத்துவந்தான். அப் பெருமகன் தமிழ்ப் புலவர்களை மதித்துவந்தான்.

அச் சோழவேந்தன் கோவூர் கிழாருடைய புலமையையும் நற்பணபுகளையும் பற்றிக் கேள்விப் பட்டான்; அவரைக் கண்டு பேச விரும்பினான்; அவரை வருவித்துப் பேசி மகிழ்ந்தான்; அவரது புலமையை நேரிற் கண்டு வியந்தான். அன்று முதல் புலவரும் நலங்கிள்ளியும் நெருங்கிய நண்ப ராயினர்.

## ஆவூர் முற்றுகை

நெடுங்கிள்ளி என்பவன் சோழ அரசர் வழியினன். அவன் நலங்கிள்ளியை ஒழிக்கத் துணிந்தான். இதனை உணர்ந்த நலங்கிள்ளி அவனை எதிர்க்கத் தக்க காலத்தை எதிர்பார்த்து இருந்தான்.

விரைவில் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் போர் மூண்டது. பல இடங்களில் போர்கள் நடைபெற்றன. நெடுங்கிள்ளி தோல்வியுற்று, ஆவூர்க் கோட்டையுள் ஒளிந்துகொண்டான். நலங்கிள்ளி அக் கோட்டையை முற்றுகை இட்டான். நெடுங்கிள்ளி கோட்டையுள் பதுங்கிக் கிடந்தான். முற்றுகை பலநாள் நீடித்தது.

கோட்டைக்கு வெளியில் இருந்த நலங்கிள்ளிக்கும் அவன் படைகளுக்கும் உணவு எளிதில் கிடைத்தது. ஆனால் கோட்டையுள் இருந்த நெடுங்கிள்ளிக்கும் அவன் படைகளுக்கும் உணவு குறைந்துகொண்டே வந்தது. கோட்டையுள் இருந்த குடிமக்களும் வெளியில் வர முடியாமல் துன்புற்றனர்.

கோவூர் கிழார் இந்த முற்றுகையைப் பற்றிக் கேள்விப்பட்டார். அவர் பிறர் சண்டையிடுதலைத் தடுக்கக் கூடியவர் அல்லவா? அவர் மனம் வருந்தியது. அவர் நேரே ஆவூர் சென்றார். அவரது வருகையை அறிந்த நெடுங்கிள்ளி கோட்டை கதவைத் திறந்தான்; புலவரை அன்போடு வ வேற்றான்.

கோவூர் கிழார் அவனை நோக்கி, "அரசே, இந்த முற்றுகையால் உன்னுடைய யானைகள் குளத்தில் படிந்து குளிக்கவில்லை; போதுமான உணவு இன்றித் தவிக்கின்றன. கோட்டைக் கதவின் அடைப்பால் கோட்டையில் வாழும் மக்கள் தண்ணீர் இல்லாமல் தவிக்கின்றனர். குழந்தைகள் பால் இல்லாமல் அழுகின்றன. பெண்களின் கூந்தல் மலர்களில்லாமல் அழகு இழந்து இருக்கிறது. நீ இத்துன்பங்களை அறியவில்லையா? அறிந்தும் நீ பேசாமலிருப்பது சரியல்லவே. நீ அற நெறியில் நிற்க விரும்பினால், நலங்கிள்ளியின் முன்னிலையில் கோட்டை வாயிலைத் திறந்துவிடு; இல்லையாயின், போர் செய்தாவது வெற்றி பெறுவாயாக. நீ இந்த இரண்டில் ஒன்று செய்யாமல் கோட்டையுள் பதுங்கியிருத்தல் நாணத்தகும் செயலாகும்", என்று உருக்கமாக உரைத்தார்.

நெடுங்கிள்ளி ஆவூர்க் கோட்டையை விட்டு அகன்றான்.

## புலவர் இளந்தத்தர்

இளந்தத்தர் என்பவர் ஒரு புலவர். அவர் தமக்கு உதவி செய்யத்தக்க வள்ளல்களை நாடிச் சென்றார். வழியில் நலங்கிள்ளியைக் கண்டார்; அவனிடம் தம் வறுமையை எடுத்துக் கூறினார். அவ்வேந்தன் அவருக்குப் பரிசில் கொடுத்து அனுப்பினான்.

பின்பு இளந்தத்தர் நெடுங்கிள்ளியைச் சென்று கண்டார். அவர் நலங்கிள்ளியிடமிருந்து வருவ

தாக ஒற்றன் நெடுங்கிள்ளியிடம் கூறினான். புலவர்கள் பொதுவாக அரசர் எல்லாரிடமும் செல்லுதல் இயல்பு என்பதை அறிந்திருந்தும், நெடுங்கிள்ளி இளந்தத்தரை நலங்கிள்ளியின் ஒற்றர் என்று தவருகக் கருதினான்; அதனால் அவரைக் கொல்லத் துணிந்தான்.

## கோவூர் கிழார் உதவி

கோவூர் கிழார் இதனைக் கேள்வியுற்றார். அவர் மனம் நெருப்பில் விழுந்த புழுப்போலத் துடித்தது. அவர் உடனே நெடுங்கிள்ளியிடம் ஓடினார். அம் மன்னன் அவரை மிக்க அன்போடு வரவேற்றான். புலவர் அவனை அன்போடு நோக்கி, “மன்னவா, பழங்களையுடைய மரம் நெடுந்தூரத்திலிருப்பினும், பறவைகள் அம் மரத்தை நாடிச் செல்லுவது இயற்கை. அதுபோலவே புலவர்கள், வள்ளல்கள் எங்கிருப்பினும், அவர்களை நாடிச் செல்லுவது இயல்பு. நின்னால் சிறை வைக்கப்பட்டுள்ள இளந்தத்தர் ஒரு புலவர்; மிக்க ஏழை; அவர் கள்ளங் கபடற்றவர்; தமது வறுமையைப் போக்க வள்ளல்களை நாடி அலைந்தார்; வழியில் நலங்கிள்ளியைக் கண்டு பரிசில் பெற்றார்; பின்பு உன்னை நாடி வந்தார். நீங்கள் இருவரும் பகைமை உடையவர் என்பதை அவர் அறியார். அந்த ஏழைப் புலவரைக் கொல்வதால் நீ அடையும் நன்மை ஒன்றும் இல்லை. யான் இதுவரையில் கூறியது உனக்குப் பொருத்தமாகத் தெரியின், புலவரை விட்டுவிடுதல் நல்லது,” என்று மொழிந்தார்.

புலவரது உருக்கமான பேச்சு நெடுங்கிள்ளியின் உள்ளத்தை உருக்கியது. அவன் உடனே இளந்தத்தரை விடுதலை செய்தான்; அவருக்கு வேண்டிய பரிசிலை நல்கினன். கோவூர் கிழார் அவனை வாயார வாழ்த்தி விடைபெற்றார்.

## உறையூர் முற்றுகை

சில மாதங்கள் கழிந்தன. உறையூர்க் கோட்டையுள் நெடுங்கிள்ளி இருந்தான். அப்பொழுது நலங்கிள்ளி அக் கோட்டையை முற்றுகை இட்டான். போர் கடுமையாக நடந்தது. கோவூர் கிழார் அப் போரைப் பற்றிக் கேள்வியுற்றார். சோழர் மரபைச் சேர்ந்த இருவர் தம்முள் போர் இடுவதை அவர் வெறுத்தார்; அவர்களுக்கு அறிவுரை கூறிப் போரை நிறுத்த விரும்பினர். அவர் உறையூரை நோக்கி ஓடினர்.

புலவர் நலங்கிள்ளியை அன்போடு பார்த்து, "போரிற் சிறந்த வேந்தே, நான் சொல்லுவதைச் சிறிது ஆராய்ந்து பார்க்க வேண்டுகிறேன். இப்போது உன்னோடு போர் செய்பவன் சேர அரசனல்லன்; பாண்டிய அரசனும் அல்லன். நீ அணிந்திருப்பதும் ஆத்தி மாலை. அவன் அணிந்திருப்பதும் ஆத்தி மாலையே. அதாவது, நீங்கள் இருவரும் சோழர் குடியையே சேர்ந்தவர்கள். உங்கள் இருவரில் எவர் தோற்பினும் சோழர் குடியே தோற்றதாகக் கருதப்படும். ஆதலால் உங்கள் செயல் அறிவாளிகள் பாராட்டத்தக்க

தன்று. நீங்கள் இருவரும் இப் போரை விட்டொழிப் பதே நல்லது'', என்று நயமாகக் கூறினார்.

புலவரது அறிவுரை இருவர் உள்ளங்களிலும் தைத்தது. அவர்கள் இருவரும் போரை நிறுத்தி விட்டனர். புலவர் அவர்களை உளமார வாழ்த்தினார்.

## புலவர் பாராட்டுரை

கோவூர் கிழார் சில நாட்கள் நலங்கிள்ளியுடன் தங்கினார்; அப்பொழுது அவனுடைய உயர்ந்த குணங்களை நேரிற்கண்டு மகிழ்ந்தார்; அவனுடைய புலமையை நேரிற்கண்டு பாராட்டினார். அவர் அவனைப் பார்த்து, "நீ நினது போர் வலிமையினால் சேர பாண்டியரினும் சிறந்து விளங்குகின்றாய். நீ பெரும்பொழுது நகரத்தில் தங்குவதில்லை; போர்க் களத்திலுள்ள பாடி வீட்டிலேயே தங்குகிறாய். உன்னிடம் உள்ள யானைகள் மிக்க வலிமை வாய்ந்தவை. அவை தம் கொம்பினால் பகைவர் கோட்டைக் கதவைக் குத்தக் கூடியவை. உன் படை வீரர்கள் 'போர்' என்றதும் துள்ளிக் குதிக்கின்றனர்; போர் எவ்வளவு தூரத்தில் நடப்பதாக இருப்பினும் உணர்ச்சியுடன் செல்கின்றனர். வட நாட்டு அரசர் இந்த விவரங்களை நன்கு அறிந்திருக்கின்றனர். அதனால் அவர்கள் உன்னைப்பற்றி அஞ்சுகின்றனர்'', என்று அவனது சிறப்பைக்கூறிப் பாராட்டினார்.

ஒரு நாள் நலங்கிள்ளியைப் பார்க்கப் புலவர் சிலர் வந்தனர். கோவூர் கிழார் அவர்களைப் பார்த்து "வாருங்கள்: நாம் எல்லோரும் நலங்கிள்ளியின் சிறப்

பைப் பாடி மகிழ்வோம். அப்பெருமகன் சிறந்த வீரன்; தாராள குணமுள்ளவன். அம்மன்னன் நமது சுற்றத்தாரது உணவிற்கு விலையாகச் சேரனது வஞ்சிமாநகரத்தைக் கொடுப்பினும் கொடுப்பான்; நம் நடன மகளிர் சூடும் மலருக்கு விலையாகப் பாண்டியன் தலைநகரான மதுரையை அளிப்பினும் அளிப்பான். அவன் விரும்பியபடி செய்யும் ஆற்றலுடையவன்'', என்று நலங்கிள்ளியின் வீரத்தையும் கொடைத் தன்மையையும் பாராட்டினர்.

## கிள்ளிவளவன்

ஆண்டுகள் சில சென்றன. நலங்கிள்ளியைப் போலக் கிள்ளிவளவன் என்பவன் சோழநாட்டு மன்னனானான். அவன் போரிற் சிறந்தவன்; கொடையிலும் சிறந்தவன். அம்மன்னனுக்கும் திருக்கோவலூரை ஆண்ட மலையமானுக்கும் பகைமை உண்டாயிற்று. அவன் எவ்வாறோ மலையமானுடைய சிறிய ஆண் பிள்ளைகள் இருவரைத் தன் தலைநகருக்குக் கொண்டுவந்தான்; மலையமான்மீது தனக்கு இருந்த பகைமையை அப்பிள்ளைகளைக் கொன்று தீர்த்துக்கொள்ள விரும்பினான்; யானையை ஏவி அப்பிள்ளைகளைக் கொல்லத் துணிந்தான்.

கோவூர் கிழார் கிள்ளி வளவனது முடிவை அறிந்தார், அவர் உள்ளம் பதைத்தது. அவர் அவனை நோக்கி விரைந்தார்; அவனை அன்போடு நோக்கி, ''சோழர் பெருமானே, உன் முன்னோருள்

ஒருவன் ஒரு புருவிற்காகத் தன் சதையை அரிந்து கொடுத்தான். நீ அத்தகைய இரக்க உள்ளம் படைத்த சோழர் மரபில் வந்தவன். இப் பிள்ளைகள் ஏழை மக்களைக் காத்துவந்த மலையமான்களின் மரபில் வந்தவர்கள்; இவர்கள் ஒன்றும் அறியாத இளம்பிள்ளைகள். அந்த யானை தங்களைக் கொல்ல வந்திருக்கிறது என்பதை அறியாமல், அதனை வியப்போடு பார்க்கின்றனர்; இங்குக் கூடியுள்ள மக்களைக் கண்டு அஞ்சுகின்றனர். நீ செய்யப் போவதை மற்றொரு முறை எண்ணிப் பார்த்துச் செய்யும்படி வேண்டுகிறேன்'', என்று நயமாகக் கூறினார்.

கிள்ளிவளவன் அறிவுடையவன். அவன் புலவர் கூறியதை நினைந்து பார்த்தான்; அப்பிள்ளைகள் மீது இரக்கம் கொண்டான்; அவர்களைக் கொல்லாது விட்டான். புலவர் அவனை உளமாரப் பாராட்டி விடைபெற்றார்.

## கோவூர் கிழார் பாடல்கள்

கோவூர் கிழார் பேசியவையாக இதுவரையில் கூறப்பெற்றவை எல்லாம் அவரால் பாடப் பட்ட பாடல்களேயாகும். அப் பாடல்களின் உட்பொருளே இங்கு உரைநடையில், தரப்பட்டுள்ளது. அப் பாடல்கள் **புறநானூறு** என்னும் சங்கநூலில் இருக்கின்றன. நீங்கள் மேல் வகுப்புக்களில் அப்பாடல்களைப் படித்து மகிழலாம்.

# 2. இளங்கோவடிகள்

## மூன்று தமிழ் நாடுகள்

சேரநாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்பன மூன்று தமிழ் நாடுகளாகும். அவற்றுள் சேரநாடு என்பது இன்றுள்ள கேரள மாகாணமேயாகும். அது மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் அரபிக் கடலுக்கும் இடைப்பட்ட குறுகிய நிலப்பரப்பாகும். அதன் தலைநகரம் வஞ்சிமாநகரம். சேர நாட்டில் பெரியாறு என்பது சிறப்புற்றது.

சோழநாடு என்பது இன்றைய தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களும் தென் ஆர்க்காடு மாவட்டத்தின் தென்பகுதியும் சேர்ந்த நிலப்பகுதியாகும். காவிரி இந்நாட்டை வளப்படுத்தும் பெரிய ஆறுகும். உறையூர் சோழநாட்டின் தலைநகர். பிற்காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் சோழர் தலை நகரமாகவும் துறைமுக நகரமாகவும் விளக்கமுற்றிருந்தது.

பாண்டிய நாடு என்பது இன்றுள்ள மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் சேர்ந்த நிலப்பகுதியாகும். மதுரை பாண்டிய நாட்டின் தலைநகரம். வையை, பொருநை என்பன பாண்டிய நாட்டில் பெயர் பெற்ற ஆறுகள்.

## சேர இளவரசர்

சேர நாட்டில் மிளகு, மயில் இறகு, யானைத்தந்தம், வாசனைப் பொருள்கள், தேக்கமரம் முதலியன மிகுதி. அவை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்

யப்பட்டன. சேரநாட்டை ஆண்ட வேந்தர்கள் வில் வீரத்தில் சிறந்தவர்கள். அவர்களிடம் கப்பற் படையும் இருந்தது.

சங்ககாலச் சேர அரசருள் நெடுஞ்சேரலாதன் என்பவன் மிகச் சிறந்த போர்வீரன். அவன் இமயம் வரையில் சென்று மீண்டவன்; அதனால் இமயவரம்பன் என்று அழைக்கப்பட்டான். அவனுக்குப் பிள்ளைகள் இருவர் இருந்தனர். அவருள் மூத்தவன் பெயர் செங்குட்டுவன். இளையவன் பெயர் இளங்கோ என்பது.

செங்குட்டுவனும் இளங்கோவும் தக்க ஆசிரியர்களிடம் கல்வி கற்றனர். அரச மக்களாக இருப்பினும், அவர்கள் அறிவுள்ளவர்கள் ஆதலால் ஆசிரியரிடம் அடங்கி ஒடுங்கிக் கல்வி கற்றனர். இளங்கோ தமிழ் அறிவிற் சிறந்து விளங்கினர். அவ்விருவரும் யானையேற்றம், குதிரையேற்றம், விற்போர், வாட்போர் முதலியவற்றை நன்கு பயின்றனர்.

## சோதிடன் கூற்று

நெடுஞ்சேரலாதன் நாள்தோறும் பேரவை கூட்டுவது வழக்கம். அந்த அவையில் அரசாங்கச் செய்திகள் கவனிக்கப்படும். அமைச்சர், சேனைத் தலைவர், அரசாங்கக் கணக்கர் முதலிய பலரும் அங்குக் கூடியிருப்பர். அரசனுக்கு இரண்டு பக்கங்களிலும் செங்குட்டுவனும் இளங்கோவும் இருந்து அரசியற் செய்திகளைக் கவனித்துக்கொண்டிருப்பர்.

ஒரு நாள் வேற்று நாட்டுச் சோதிடன் ஒருவன் அரசன் இசைவு பெற்று அவையுள் நுழைந்தான். அவன் இளங்கோவையும் செங்குட்டுவனையும் மாறி மாறிப் பலமுறை பார்த்தான்; இறுதியில் எழுந்து நின்று, மன்னனை வணங்கி, "சேரர் பெருமானே, யான் கூறுவதைக் கேட்டு வருந்தாதிருக்க வேண்டு கிறேன். இப்பிள்ளைகள் இருவருள் இளையவரிடமே அரச இலக்கணங்கள் நன்கு அமைந்துள்ளன. எனவே, இளையவரே அரசர் ஆவதற்கு உரியவர்," என்று உரைத்தான்.

அது கேட்ட இளங்கோ மிக்க சீற்றங் கொண் டார். அவர் சோதிடனைப் பார்த்து, "சோதி டரே, மூத்தவர் இருக்க இளையவன் அரசு பெறுதல் இயற்கைக்கு மாறுபட்டது; மேலும் எங்கள் மர பில் இல்லாதது. என் அண்ணனிடம் ஒரு குறை யும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவரே தந்தையார்க்குப் பிறகு அரசாளத் தகுதியுடையவர்" என்று அறைந்தார்.

## இளங்கோ 'அடிகள்' ஆதல்

சோதிடன், "அரசே, எனக்குத் தெரிந்த சோதிட அறிவைக் கொண்டு எனக்குப் பட்ட தைச் சொன்னேன்; இளையவரே பட்டத்திற்கு வருவார்," என்று அழுத்தமாகக் கூறினான். அதுகேட்ட அரசன் திடுக்கிட்டான். செங்குட் டுவன் முகம் சுருங்கியது. இளங்கோவின் கண்கள் சிவந்தன. அவர் சோதிடனை நோக்கி, "அறிவற்ற சோதிடனே, உனது கூற்று இன்னும்

சிறிது நேரத்தில் பொய்த்து விடும். என் அண்ணனுக்கு மாருக நான் ஒருபோதும் அரசனுகேன். நான் திருமணம் செய்துகொண்டு அரண்மனையில் இருப்பின், நீ கூறிய சோதிடப்படி எனது மனம் மாறினும் மாறலாம். ஆதலால் நான் இப்பொழுதே துறவு கொள்கிறேன். இந்த நிமிடம் முதல் எனக்கும் அரசுக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்பதை உங்கள் அனைவர் முன்னிலையிலும் தெரிவிக்கிறேன். இது உறுதி,'' என்று வற்புறுத்திக் கூறினர்.

அரசன் கண்ணீர் வடித்தான்; இளங்கோவை மார்போடு தழுவிக்கொண்டான். செங்குட்டுவனும் விழிநீர் வாரத் தன் தம்பியை அணைத்துக்கொண்டான். அவையோர் வியப்படைந்தனர். அன்று முதல் இளங்கோ, இளங்கோவடிகள் என்று அழைக்கப்பட்டார்.

## செங்குட்டுவன்

நெடுஞ்சேரலாதனுக்குப் பின்பு செங்குட்டுவன் அரியணை ஏறினன். அவன் சிறந்த போர்வீரன்; கடற் கொள்ளைக்காரரை அழித்தான். தன் மைத்துனச் சோழனைச் சோழநாட்டுக்கு மன்னனாக்கினன்; சிற்றரசர் பலரை வென்றான். வட நாட்டை ஆண்ட ஆந்திரப் பேரரசரும் மாளுவ மன்னரும் இலங்கை அரசனும் அவனுக்கு நண்பர்கள். அவன் மனைவி இருங்கோ வேண்மாள் என்பவள். அவள் அழகிலும் அறிவிலும் குணங்களிலும் சிறந்தவள். செங்குட்டுவன் சிறந்த சிவபக்தன்; ஆயி

னும் எல்லாச் சமயங்களையும் பெருமைப்படுத்தினான்; தமிழ்ப் புலவர்களைத் தளராது சிறப்பித்தான்.

கண்ணகிபற்றிய செய்தி

பல ஆண்டுகளுக்குப் பின்பு, ஒரு நாள் செங்குட்டுவன் பெரியாற்றங் கரையிலிருந்த மலைவளத்தைக் காணச் சென்றான். அவனுடன் அவன் கோப்பெருந்தேவியும் இளங்கோவடிகளும், அமைச்சர், சேனைத்தலைவர் முதலியோரும் சென்றனர். அப்பொழுது மதுரைப் புலவர் கூலவாணிகன் சாத்தனார் என்பவரும் உடன் இருந்தார்,

அரசனது வருகையைக் கண்ட மலைவாழ் மக்கள் தேன், கிழங்கு முதலியவற்றைக் கொண்டு வந்து அரசன் முன்வைத்து வணங்கி நின்றனர். "உங்கள் நாட்டில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஏதேனும் உண்டோ?" என்று காவலன் கேட்டான்; அவர்கள் அரசனைப்பணிந்து, "சில நாட்களுக்கு முன்பு ஒரு பெண் எங்கள் மலைமீதுள்ள வேங்கை மரத்தடியில் வந்து நின்றாள். அப்பொழுது விண் வழியே ஒரு விமானம் வந்தது, அவள் அதில் ஏறிச் சென்றாள்," என்று கூறினர்.

அரசன் அவர்களை அனுப்பிவிட்டு, "அப் பெண்மணி யாரென்று தெரியவில்லையே!" என்று கவலைப்பட்டான். அப்பொழுது சாத்தனார், "அவள் வரலாற்றை நான் அறிவேன்," என்று கூறிக் கண்ணகி வரலாற்றை விளக்கமாக எடுத்துக் கூறினார். அது கேட்ட அனைவரும் வியப்புற்றனர். சேரமாதேவி, " நம் நாட்டுக்கு வந்து வானுலகம்

சென்ற பத்தினியை நாம் வழிபடுதல் நல்லது,'' என்றான்.

## வடநாட்டு யாத்திரை

மன்னன் பத்தினிக்குக் கோயில் கட்டத் துணிந்து, அவளது உருவம் பொறிக்கத் தக்க கல்லை இமயத்திலிருந்து கொண்டுவரத் துணிந்தான்; தனது வருகையை நூற்றுவர் கன்னர் என்ற ஆந்திர அரசர்க்கு அறிவித்தான்; மிகப் பெரும் படையுடன் இமயம் நோக்கிச் சென்றான்; நூற்றுவர் கன்னர் துணையால் கங்கையாற்றைக் கடந்தான்: தன்னை எதிர்த்த கனக-விசயர் என்பவரை வென்றான்; தமிழ் அரசர் ஆற்றலை இழித்துரைத்த அவர்தம் தலைகள்மீது இமயத்திலிருந்து கொண்டு வரப்பட்ட கல்லை ஏற்றினான்.

## பத்தினிக் கடவுள்

செங்குட்டுவன் பத்தினிக்குக் கோவில் எடுப்பித்தான்; அக்கோவிலில் அவளது உருவச்சிலையை நிறுத்தினான்; பத்தினிக்கு விழா இயற்றினான். அரசர் பலர் வந்து அவ்விழாவைச் சிறப்பித்தனர். கண்ணகி விண்ணில் தோன்றிச் செங்குட்டுவனை வாழ்த்தினாள்.

## சிலப்பதிகாரம்

இளங்கோவடிகள் கண்ணகி வரலாற்றைச் சாத்தனார் வாயலாகக் கேட்டார்; பின்பு நடைபெற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் நேரில் கண்டார். சிலம்பு காரணமாகக் கோவலன் கொல்லப்பட்டான்.

அது காரணமாகவே கண்ணகியின் கற்பின் திறன் வெளிப்பட்டது. அங்ஙனம் வெளிப்பட்டதால் அவள் தெய்வமாக வழிபடப்பட்டாள். எனவே, கோவலன்—கண்ணகி வரலாறு சிலம்பை அடிப்படையாகக் கொண்டது என்பது தெளிவு, ஆதலால் இளங்கோவடிகள் கோவலன்—கண்ணகி வரலாற்றை ஒரு பெரிய நூலாகப் பாடி, அதற்குச் சிலப்பதிகாரம் என்று பெயரிட்டார்.

கோவலனும் கண்ணகியும் சோழநாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்து வளர்ந்தவர்கள்; பிழைப்புக் கருதிப் பாண்டிய நாட்டிற்கு வந்தார்கள். மதுரையில் கோவலன் அரசன் ஆணைப்படி கொல்லப்பட்டான். கண்ணகி வழக்காடிப் பாண்டியன் இறக்கும்படி செய்தாள்; மதுரையை எரித்தாள்; பின்பு வையையின் வடகரை வழியே சென்று சேரநாட்டை அடைந்தாள்; அங்கிருந்து வானுலகம் சென்றாள்.

இந்த வரலாற்றில் முறையே சோழநாடு, பாண்டியநாடு, சேரநாடு ஆகிய மூன்றும் தொடர்பு கொண்டுள்ளன; மூன்று தலை நகரங்களும் தொடர்பு கொண்டுள்ளன; மூன்று அரசர்களும் தொடர்பு கொண்டுள்ளனர். இவ்வாறு மூன்று தமிழ்நாடுகளையும் தன்பால் இழுத்துக்கொண்ட வரலாறு வேறொன்றும் இல்லை.

இளங்கோவடிகள் இந்தப் பெரிய நூலை மூன்று தலைநகரங்களின் பெயர்களால் (புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம்) மூன்று

காண்டங்களாகப் பிரித்துள்ளார். இந்நூலில் முப்பது காதைகள் உள்ளன ; இயல்—இசை—நாடகம் என்னும் முத்தமிழும் அடங்கியிருக்கின்றன. மலைநாடு, காட்டு நிலம், பாலைநிலம், வயலும் வயல் சார்ந்த மருத நிலம், கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலம் ஆகிய ஐவகை நிலங்களும் அவற்றின் இயல்புகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

சிலப்பதிகாரம் என்னும் இந்நூல் தமிழ்க் காவியங்களில் சிறந்தது. இப்பலவகைச் சிறப்புக்கள் இதனிடம் நிறைந்திருப்பதால்தான் கவியரசர் பாரதியார் இதனை,

"நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம்"

என்று உளமாரப் பாராட்டினர். நீங்கள் இப்பெரு நூலைப் படித்துப் பயன் பெறுதல் வேண்டும்.

# 3. சாத்தனார்

## பேரும் ஊரும்

இவர் இளங்கோவடிகள் காலத்தவர். "சகஸ்தன்' என்பது புத்தர் பெயர்களுள் ஒன்றாகும். அப் பெயரே திரிந்து 'சாத்தன்' என்று ஆயிற்று,'' என்று சிலர் செப்புகின்றனர். "சாத்தன் என்பது ஐயனார்க்கு வழங்கும் பெயர் அப் பெயரே இப் புலவர்க்கு வழங்கப்பட்டிருக்கலாம்'' என்று வேறு சிலர் கூறுகின்றனர். இவர் 'சீத்தலைச் சாத்தனார்' என்றும், 'மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்' என்றும் கூறப்பட்டார். சீத்தலை என்பது ஓர் ஊரின் பெயராகும். இப்பெயர் கொண்ட ஊர் திருச்சிராப் பள்ளி மாவட்டத்தில் இருக்கின்றது. இப்புலவர் அவ்வூரில் பிறந்து வளர்ந்தவராக இருத்தல் வேண்டும்; ஆதலால் சீத்தலைச் சாத்தனார் என்று பெயர் பெற்றிருத்தல் வேண்டும்.

## மதுரையிற் குடியேற்றம்

சாத்தனார் இளமையில் நல்லாசிரியர் ஒருவரிடம் கல்வி பயின்றார்; அக்கால வழக்கிலிருந்த தொல் காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும் பல்வேறு இலக்கிய நூல்களையும் திருக்குறளையும் பழுதறப் படித்தார்; அதன் பயனாகப் பெரும் புலவராகத் திகழ்ந்தார்.

அக்காலத்தில் பாண்டியர் கோநகரமான மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்து வந்தது தமிழ் நாட்டுப்புலவர் பலர் அங்குச் சென்று, பாக்களாலும் நூல்களாலும் தமது புலமையை வெளிப்படுத்திப் பாண்டியரிடம் பரிசு பெறுவது வழக்கம். சாத்தனர் இவற்றைக் கேள்விப்பட்டார் ; சங்கப் புலவர்களோடு வாழ விரும்பினர்; தமது புலமையை மேலும் மேலும் வளர்க்க ஆவல் கொண்டார் ; வாய்ப்பு நேருமாயின், நாட்டில் என்றும் நிலைக்கத் தகும் பெரிய நூல் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று விழைந்தார்.

இவ்விருப்பங்களால் உந்தப்பட்ட சாத்தனர் மதுரையில் குடியேறினர். அங்கு ஒரு கடையைத் திறந்தார். நெல், வரகு, தினை, சாமை, ராகி முதலிய பதினெட்டு வகைத் தானியங்கள் அக்காலத்தில் ‘கூலம்’ எனப்பெயர் பெற்றன. சாத்தனர் அவற்றைத் தம் கடையில் வைத்து வாணிகம் நடத்தினர்; அதனல், ‘கூலவாணிகன் சாத்தனர்’ என்று மக்களால் அழைக்கப்பட்டார்.

சாத்தனர் சங்கப் புலவர்களோடு அறிமுகம் செய்துகொண்டார்; தம் ஓய்வு நேரங்களில் அவர்களோடு நெருங்கிப் பழகினர். பெரும் புலமையும் களங்கமற்ற உள்ளமும் படைத்த புலவர் பெருமக்களது நட்பு அவருக்குக் கிடைத்தது. அந்த நட்பு நாளும் வளர்பிறை போல வளர்ந்து வந்தது.

தமிழரசர் நட்பு

சாத்தனார் சேரநாட்டுப் புலவர்களோடு ஒரு முறை சேரநாடு சென்றார்; அப்பொழுது சேர மன்னனாக விளங்கிய செங்குட்டுவனைக் கண்டு அளவளாவினார்; அவனது தம்பியாரான இளங்கோவடிகளிடமும் நட்புக் கொண்டார். விரைவில் அவ்விருவரும் உள்ளம் ஒத்த நண்பர்களாயினர். செங்குட்டுவன் சிறந்த சிவபக்தன். இளங்கோவடிகள் சிறந்த சமணத் துறவி. சாத்தனார் பௌத்த சமயத்தினர். ஆயினும், இச்சமய வேறுபாடுகளை மறந்து, அம் மூவரும் உண்மை நண்பர்களாய் விளங்கினர்.

சாத்தனார் மதுரையில் குடியேறிய காலத்தில் பாண்டிய நாட்டை நன்மாறன் என்பவன் ஆண்டு வந்தான். அவன், கண்ணை இமைகள் காப்பது போலத் தமிழ்ச் சங்கத்தைக் காத்துவந்தான். தம்மை நாடி வந்த இயல்—இசை--நாடகப் புலவர்களை நன்கு பாதுகாத்தான். அவன், சோழநாட்டுப் புலவரான சாத்தனார் தனது தலைநகரத்தில் குடியேறி இருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தான்; அவரைத் தன் அரண்மனைக்கு அழைத்தான்; அவரது பெரும் புலமையை உணர்ந்து அவருக்குத் தக்கவாறு பரிசளித்தான்.

புலவர் அவனை அன்புடன் பார்த்து, "பாண்டியர் பெருமானே, நீ புலவர்க்குப் புரவலன் ; இரவலர்க்கு வள்ளல். நீ காலையில் கடலிடத்தே தோன்றி எழுகின்ற சிவந்த சூரியனைப்போல் பகைவரைச் சுட்டு எரிப்பவன். ஆனால் அதே சமயத்தில் நீ என்னைப்

போன்ற புலவர்க்கும் பாணர்க்கும் கூத்தர்க்கும் திங்களைப்போன்றவன். பாண்டியர் பெருமானே. நீ நீடு வாழ்க!" என்று கூறி வாழ்த்தினர்.

## கண்ணகிபற்றிய செய்தி

சாத்தனர் மதுரையில் இங்ஙனம் வாழந்து வந்தபோதுதான் கோவலன் தன் மனைவியான கண்ணகியுடன் மதுரைக்கு வந்தான். அவன் சோழர் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்து வளர்ந்தவன். அவனும் அவன் மனைவியும் சிறந்த செல்வக் குடும்பங்களில் பிறந்தவர்கள். ஆயினும், கோவலன் மாதவி யென்னும் ஆடல் மகள்மீது அளவற்ற அன்பு கொண்டான்; பல ஆண்டுகள் அவளோடு வாழ்ந்தான்; தனக்கென்று அவன் பெற்ரேர் விட்டுவைத்த செல்வம் முழுமையும் ஒழித்தான்; வறியவன் ஆன பின்பு தனது கூடாவொழுக்கத்திற்கு நாணினன்; நாடுவிட்டு நாடு சென்று ஏதேனும் தொழில் செய்து பிழைக்க எண்ணினன்; அந்த எண்ணத்துடன் தன் மனைவியை அழைத்துக்கொண்டு கால கடுக்க நடந்து மதுரையை அடைந்தான்.

அப்போது மதுரையை நெடுஞ்செழியன் என்பவன் ஆண்டுவந்தான்; அவன் கல்வி கேள்வி களில் சிறந்தவன்; செங்கோல் அரசன். அவனது கோப்பெருந்தேவியின் சிலம்புகளில் ஒன்றை அரண்மனைப் பொற்கொல்லரின் தலைவன் கவர்ந்து கொண்டான்; அது களவு போய்விட்டது என்று பொய் கூறினன். அச்சமயத்தில்தான் கோவலன்

தன் மனைவியின் காற்சிலம்புகளுள் ஒன்றை விற்று வரும் பொருளைக் கொண்டு மதுரையில் வாணிகம் நடத்த விரும்பினான். அவன் அதனை யாரிடம் காட்டலாம் என்று கடைத் தெருவில் நின்றபடி எண்ணிக்கொண்டிருக்கையில், முன் கூறப்பட்ட பொற்கொல்லர் தலைவன் கோவலனுக்கு எதிரில் வந்துகொண்டிருந்தான். அவனுக்குப் பின்னே பொற்கொல்லர் நூற்றுவர் வந்துகொண்டிருந்தனர்.

கோவலன் அவனைக் கண்டு தன் சிலம்பைக் காட்டினான். அவன் அரசனிடம் அதுபற்றிப் பேசி வருவதாகக் கூறி, அரண்மனை நோக்கி விரைந்தான். அப்போதுதான் பாண்டியன் அவசரமாகக் கோப்பெருந்தேவியின் அந்தப்புரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். பொற்கொல்லன் அவனைக் கண்டு பணிந்து, "நமது மாதேவியின் சிலம்பைக் கவர்ந்த கள்வன் அச்சிலம்பை விற்க நமது நகரத்திற்கே வந்திருக்கிறான்," என்றான். அதுகேட்ட பாண்டியன் சினங்கொண்டான்; உண்மையை ஆராயாது காவலரை அழைத்தான்; "இவன் கூறும் மனிதனிடம் சிலம்பு இருக்குமாயின், அவனைக்கொன்று அச்சிலம்பைக் கொண்டுவருக," என்று ஆணையிட்டான். அந்தோ! பொற்கொல்லன் சூழ்ச்சியால் கோவலன் கொல்லப்பட்டான்.

தன் சிலம்பை விற்கச் சென்ற கணவன், மாதேவியின் சிலம்பைக் கவர்ந்த கள்வன் என்று கருதப்பட்டுக் கொல்லப்பட்டான் என்பதைக் கண்ணகி கேள்வியுற்றாள்; கடுஞ்சினம் கொண்

டாள்; தனது மற்றொரு சிலம்பைக்கையில்எடுத்துக் கொண்டு மதுரைத் தெருக்களில் புலம்பிக் கொண்டே சென்றாள்; வெட்டுண்ட கணவனின் உடலைத் தழுவினாள்; பாண்டியனுக்கு உண்மையை உணர்த்த விரும்பினாள்; அரண்மனைக்குச் சென்று தன் சிலம்பை உடைத்துக் காட்டினாள். அதனுள் மாணிக்கப் பரல்கள் இருந்தன. கோப்பெருந்தேவி யின் சிலம்பில் முத்துப் பரல்கள் இருந்தன.

அரசன் அப்பொழுதுதான் தன் தவற்றை உணர்ந்தான்; "உண்மையை ஆராயாது குற்ற மற்றவனைக் கொல்வித்த யானோ அரசன்? யானே கள்வன்!" என்று கூறிக்கொண்டே மண்ணில் விழுந்து மாண்டான். அவனது கோப்பெருந்தேவி யும் உடனே உயிர் விட்டாள். கண்ணகி சீற்றம் தணியாதவளாய், மதுரையின் பெரும்பகுதியைத் தன் கற்பின் வலிமையால் எரித்தாள்; பின்பு வையையின் ஒரு கரை வழியே சென்றாள்.

சாத்தனார், கோவலன் கொலையுண்ட போது மதுரையில் இருந்தார். அவர் கண்ணகியின் வர லாற்றைக் கேட்டுணர்ந்தார்; சில நாட்களுக்குப் பின்பு சேரன் செங்குட்டுவனைக் காணச் சென்றார். அவர் வாயிலாகக் கண்ணகியின் வரலாற்றை அறிந்த செங்குட்டுவன், தன் நாட்டிற்கு வந்து வானுலகம் சென்ற கண்ணகியைக் கோவில் கட்டி வழிபடத் துணிந்தான்; துணிந்தபடியே செய்தும் முடித்தான். இது இளங்கோவடிகள் வரலாற்றில் விரிவாகக் கூறப்பட்டுள்ளதன்றோ?

மணிமேகலை வரலாறு

மணிமேகலை என்பவள் கோவனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள்; கல்வியிலும் அழகிலும் நற்பண்புகளிலும் சிறந்தவள். கோவலன் கொல்லப்பட்ட பின்பு மாதவி நடனமாடும் தொழிலை விட்டாள். பௌத்த சமயத்தைத் தழுவினாள்; தன் மகளான மணிமேகலையையும் அச்சமயத்தில் ஈடுபடச் செய்தாள். அவளது பேரழகைக் கண்ட சோழ இளவரசனான உதயகுமரன் அவள்மீது காதல் கொண்டான். அவன் இறுதியில் ஒரு வித்தியாதரனால் கொல்லப்பட்டான்.

மணிமேகலை மணிமேகலா தெய்வம் என்ற பெண் தெய்வத்தின் அருளால் வானத்தில் பறந்து செல்லவும் நினைத்தபடி உருவம் மாறவும் அறிந்தாள். அவள் ஜாவா சென்று மீண்டாள். உணவு எடுக்க எடுக்க வற்றாத 'அமுதசுரபி' என்னும் பிச்சைப்பாத்திரம் ஒன்று அவளுக்குக் கிடைத்தது. அவள் அதைக் கொண்டு காவிரிப்பூம்பட்டினத்திலும் காஞ்சிமாநகரத்திலும் இருந்த குருடர், செவிடர், ஊமைகள் முதலியோர்க்கு உணவு வழங்கினாள்; அத்தொண்டினால் அறச்செல்வி என்று பெயர் பெற்றாள்.

அவள் வஞ்சிமாநகரம் சென்றாள்; செங்குட்டுவன் எடுப்பித்த கோவிலில் பத்தினிக் கடவுளை வழிபட்டாள். பௌத்தம், சமணம், சைவம்; வைணவம் முதலிய சமயங்களில் வல்ல அறிஞரைச் சந்தித்தாள்; அவரவர் சமயக் கொள்கைகளை கேட்டறிந்தாள்; இறுதியில் பௌத்த சமயமே சிறந்

தது என்று எண்ணி, அச்சமயத்தைத் தழுவித் தவங்கிடந்தாள்.

## மணிமேகலை என்னும் பெருங்காவியம்

மணிமேகலையின் வரலாறு நமது சாத்தனாரின் உள்ளத்தைக் கவர்ந்தது. அவர் அவளது வரலாற்றை ஒரு பெருங்காவியமாகப் பாடினார். இளங்கோ அடிகள் பாடிய சிலப்பதிகாரம்போலவே அதுவும் பெருங்காவியமாகும். அக்காவியம் முப்பது காதைகளைக் கொண்டது; காவிரிப்பூம் பட்டினம், வஞ்சிமாநகரம், காஞ்சிமாநகரம், பற்றிய பல விவரங்களைக் கொண்டது; மாலைக்கால வருணனை முதலிய வருணனைப் பகுதிகள் பலவற்றைக் கொண்டது. பல சமயக் கொள்கைகள் அதனில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. செய்யுளின் நடை எளிமையும் இனிமையும் வாய்ந்தது. சாத்தனார் பௌத்த சமயத்தினர் ஆதலால், இப்பௌத்த காவியத்தைச் செய்தார்; இந்நூலால் இறவாத புகழடைந்தார்.

உலகம் தோன்றிய நாள்தொட்டு இன்றளவும் கோடிக்கணக்கான மக்கள் பிறந்து வாழ்ந்து இறந்தனர். ஆனால் அவருள் சிலருடைய பெயர்களே உலகில் நிலைத்து இருக்கின்றன. நாட்டு நலத்திற்குப் பாடுபட்டு மறைந்த அரசர்களின் பெயர்கள் நிலைத்துள்ளன; மனித இனத்திற்குப் பாடுபட்டு மறைந்த பெரியார்களின் பெயர்களும் நிலைத்துள்ளன; என்றும் இறவாத புகழுடைய நூல்களைச் செய்த புலவர்களின் பெயர்களும் உலகமக்களின் உள்ளங்களில் நிலைத்து நிற்கின்றன. அத்தகைய பெயர்களுள் சாத்தனார் பெயரும் ஒன்றாகும்.

# 4. திருத்தக்க தேவர்

## திருத்தக்க தேவர்

இவர் கி. பி. 10-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தவர். இவர் இளமையில் தமிழையும் வடமொழியையும் நன்கு கற்றுர்; பல சமய நூல்களையும் ஆராய்ந்தார்; சமண சமயத்தைத் தழுவினுர். இல்லறத்தில் இருக்க விரும்பாமல் துறவறத்தை மேற்கொண்டார்; சமணசமய முனிவர் ஒருவரை அடைந்து, அவர் மாணவராய் இருந்துவந்தார்.

## நரிவிருத்தம் பாடுதல்

ஒருமுறை தேவர் தம் ஆசிரியருடன் மதுரைக்குச் சென்றுர். மதுரையில் தமிழ்ப்புலவர் சிலர் கூடித் தமிழ்ச்சங்கம் ஒன்றை நடத்திவந்தனர். தேவர் அவர்களுடன் பழகினுர். அப்புலவர்கள், "துறவிகள் துறவு பற்றிப் பாடுவார்களே தவிர, இல்லறவாழ்வு பற்றி நல்ல முறையில் பாடார். இல்வாழ்க்கை அநுபவம் இல்லாததால் அவர்களால் இல்வாழ்வு பற்றிப் பாட இயலாது," என்று கூறினர். தேவர், "ஐயன்மீர், துறவிகள் இல்வாழ்க்கை பற்றி நன்கு அறிந்தவர்களே, ஆயின், அவர்கள் இல்வாழ்க்கையை வெறுப்பவர்கள்; ஆயினும் இல்வாழ்க்கையைப் பற்றி விரிவாகப் பாடவல்லவர்கள்," என்று பதில் கூறினுர். "துறவிகள் இல்வாழ்க்கைபற்றி நூல் பாட வல்லவர் என்பது

உண்மையாயின், தாங்களே ஒரு நூல் பாடுங்கள்,'' என்று புலவர் புகன்றனர்.

திருத்தக்கதேவர் தமது ஆசிரியரை அடைந்து நடந்ததைக் கூறினர். ஆசிரியர் தேவரது திறமையினை நன்கறிந்தவர்; ஆயினும் அவரது மனநிலையை அறிய விரும்பினர் அவ்வமயம் அவர்களுக்கு எதிரில் நரி ஒன்று ஓடியது. ஆசிரியர் நரியின் இயல்பைப் பற்றிச் சிறு நூல் ஒன்று பாடும்படி கட்டளையிட்டார். தேவர் ஆசிரியர் விருப்பப்படி ஒரு சிறு நூலைப் பாடி முடித்தார். அதன் பெயர் நரி விருத்தம் என்பது.

## நரிவிருத்தத்தின் உட்பொருள்

ஒரு மலைநாட்டில் வேடர் சேரி ஒன்று இருந்தது. அங்கு வாழ்ந்த வேடர்களுள் ஒருவன், ஒரு நாள் ஒரு யானையைக் கண்டான். அது தினைப் புனத்தை அழிக்க வந்தது. வேடன் அதன் மத்தகத்தைக் குறிபார்த்து அம்பை எய்தான். அப்போது அவன் ஒரு பாம்புப் புற்றின்மீது நின்றிருந்தான். அம்பு பட்ட யானை அவனைக் கொல்ல நெருங்கியது. வேடன் மற்ருேர் அம்பை எய்தான். யானை மண்ணில் வீழ்ந்து மாண்டது. அவ்வமயம் அப்புற்றினுள் இருந்த நாகம் வெளியே வந்து வேடனைத் தீண்டிற்று. வேடன் அதனைத் தனது வாளால் இரண்டு துண்டாக வெட்டினன்; விடம் தலைக்கேறியதால் அவ்விடத்திலேயேவீழ்ந்து இறந்தான்.

பின்பு அவ்வழியாக நரி ஒன்று வந்தது. அது அப்போது மிக்க பசியோடு இருந்தது. அது இறந்து

கிடந்த யானையையும் வேடனையும் பாம்பையும் பார்த்தது ; பின்வருமாறு எண்ணியது: "இந்த யானையின் இறைச்சி நமக்கு ஆறு திங்களுக்குஉண வாகும்; வேடனது இறைச்சி ஒருவாரத்திற்கு உணவாகும்; பாம்பின் இறைச்சி ஒரு நாள் உண வாகும்."

பின்பு அந்நரி வேடன் கையிலிருந்த வில்லின் நாணைக் கடித்தது. நாண் அறுபட்டது. அதனால் வில் நிமிர்ந்து நரியின் வாயைப் பிளந்தது. பாவம்! ஆறு மாதங்களுக்கு உணவு கிடைத்தது என்று உளம் மகிழ்ந்த நரி, அவ்வாறு எண்ணிய சிறிது நேரத்திற்குள் இறந்துவிட்டது.

இக்கதையால் ஆசிரியர் உணர்த்துவது யாது? "உடம்பு நிலையாது. இதனை அறியாத மக்கள், பலவாறு பொருளை ஈட்டுகின்றனர் ; அதனைத் தாமும் உண்ணுவதில்லை; பிறர்க்கும் வழங்குவ தில்லை ; திடீரென்று இறந்து ஒழிவர்," என்னும் உண்மையை ஆசிரியர் இக்கதையால் உணர்த்து கிறார்.

## சீவக சிந்தாமணியைப் பாடுதல்

தேவரது திறமையைக் கண்ட அவரது ஆசிரி யர், இல்வாழ்க்கை பற்றிய பெரிய நூலொன்றைப் பாடும்படி பணித்தார். திருத்தக்கதேவர் வடநாட் டில் வாழ்ந்த சீவகன் என்ற அரசனது வரலாற்றை 3145 செய்யுட்களைக் கொண்ட ஒரு பெரிய நூலாகப் பாடினார்.

## சிந்தாமணியின் உட்பொருள்

வட இந்தியாவில் ஏமாங்கத நாடு என்பது ஒன்று. இராசமாபுரம் என்பது அதன் தலைநகரம். அந்நகரத்தில் சச்சந்தன் என்னும் அரசன் இருந்தான். அவன் மனைவி விசயை என்பவள். மன்னனுக்கு அமைச்சர் பலர் இருந்தனர். அவருள் கட்டியங்காரன் என்பவன் ஒருவன். அவன் நயவஞ்சகன்; அரசனிடம் பணிவோடு நடந்துகொண்டான். அரசைக் கவர வேண்டுமென்பது அவனது எண்ணம். அவ்வுண்மையை உணராத வேந்தன் அவனிடம் அரசாட்சியை ஒப்புவித்தான்; தான் அரண்மனையிலேயே ஆடல் பாடல்களில் காலம் கழிக்கலானான்.

கட்டியங்காரன் படைவீரரைத் தன் பக்கம் சேர்த்துக்கொண்டான்; அரசனைக் கொல்லத் தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தான். விசயை கருவுற்றாள். ஒன்பது மாதங்கள் கடந்தன. அரசன் கட்டியங்காரன்மீது ஐயம் கொண்டான்; நினைத்தவுடன் மேலே பறந்து செல்லத்தக்க மயிற்பொறி ஒன்றைச் செய்வித்தான். ஒரு நாள் திடீரென்று கட்டியங்காரன் அரண்மனைமீது படையெடுத்தான். மன்னன் தன் மனைவியை மயிற் பொறியின் துணையைக் கொண்டு வெளியேறும்படி செய்தான்; தன்னால் இயன்ற அளவு போர்செய்து இறுதியில் மாண்டான்.

மயிற்பொறி இராசமாபுரத்துச் சுடுகாட்டை அடைந்தது. அப்போது நள்ளிரவு நேரம். அரசமாதேவி அங்கு ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள்.

அப்பொழுது அச்சுடுகாட்டில் இருந்த தெய்வம் ஒன்று அவளது தோழியின் வடிவத்தில் அங்குத் தோன்றியது; “ தாயே, இம்மகன் பேரரசனுவன். இவனை வளர்ப்பதற்குரிய ஒருவன் சிறிது நேரத்தில் இங்கு வருவான். ஆதலால் இம்மகனை இங்குவிட்டு நாம் மறைந்திருத்தல் நல்லது,” என்று கூறிற்று.

சிறிது நேரம் கழிந்தது. இராசமாபுரத்து வணிகன் கந்துக்கடன் என்பவன் இறந்த தன் மகனை அடக்கம் செய்ய அங்கு வந்தான். அவன் விசயை பெற்ற குழந்தையைக் கண்டான்; அதன் கையிலிருந்த மோதிரத்தைப் பார்த்தான்; அது அரசன் குழந்தை என்பதை உணர்ந்தான்; மிக்க மகிழ்ச்சியோடு அதனை எடுத்தான்; அதன் மோதிரத்தைக் கழற்றி மறைத்துவிட்டான் அக்குழந்தைக்குச் சீவகன் என்று பெயரிடப்பட்டது.

விசயை சமண முனிவர் ஆசிரமத்தை அடைந்து தவ ஒழுக்கத்தில் வாழ்ந்துவந்தாள். சீவகன் கந்துக்கடன் வீட்டில் வளர்ந்துவந்தான். அவனுக்கு நண்பர் பலர் சேர்ந்தனர். அவன் ஒரு முனிவரிடம் கல்வி கற்ருன்; போர்ப்பயிற்சியும் பெற்ருன். அவர் ஒருநாள் அவனைத் தனியே அழைத்து, அவனது வரலாற்றை உணர்த்தினர். சிறிது காலம் பொறுத்திருந்து பிறகு கட்டியங்காரனைக் கொன்று பழிதீர்த்துக்கொள்ளும்படி யோசனை கூறினர்.

சீவகன் தன் நண்பர்களோடு இன்பமாகப் பொழுது போக்கிவந்தான். ஒருநாள் இராசமா

புரத்தில் இருந்த பசுக்களை வேடர் கவர்ந்து சென்றனர். கட்டியங்காரன் தன்மக்களையும் பிறரையும் அனுப்பினான். அவர்கள் வேடரிடம் தோற்றுத் திரும்பினர். பசுக்களின் சொந்தக்காரன் நந்தகோன் என்பவன். அவன் தன் பசுக்களை மீட்டுத் தருபவனுக்குத் தன்மகள் கோவிந்தையை மணமுடிப்பதாக முரசு அறைவித்தான். சீவகன் தன் தோழருடன் சென்று பசுக்களை மீட்டான்; நந்தகோன் மகளைத் தன் தோழனான பதுமுகனுக்கு மணம் செய்வித்தான்.

காந்தருவதத்தை என்பவள் ஒரு வித்தியாதரன் மகள். அவள் பிறந்தபோது அவளுக்கு இராசமாபுரத்தில் மணவாழ்க்கை நிகழும் என்று சோதிடர் கூறினர். அவள் வீணை வாசிப்பதில் வல்லவள். அவள் தந்தை இராசமாபுரத்து வணிகன் ஒருவனிடம் அவளை ஒப்புவித்தான். அவ்வணிகன் கட்டியங்காரனது இசைவைப் பெற்று, ஒரு மண்டபம் கட்டினான். அங்குக் காந்தருவதத்தையை இருக்கச் செய்தான்; அவளை வீணைப்போரில் வெல்பவர்க்கே அவள் மாலையிடுவாள் என்று கூறினான். பலர் முயன்று தோற்றனர். இறுதியில் சீவகன் வீணைப் போரில் வெற்றி பெற்றான். கட்டியங்காரன் பொறாமை கொண்டான். அப்போது போர் நடந்தது. அப்போரிலும் சீவகனே வெற்றி பெற்றான்; காந்தருவதத்தையை மணந்துகொண்டான்.

இராசமாபுரத்தில் குபேரதத்தன் என்பவன் ஒரு வணிகன். அவனுக்குக் குணமாலை, சுரமஞ்சரி என்னும் மகளிர் இருவர் இருந்தனர். அவர்கள் தனித்தனியே வாசனைப் பொடியைத் தயாரித்தனர்; தாம் தாம்

செய்த பொடியே உயர்ந்தது என்று வாதாடினர் இறுதியில் குணமாலை தயாரித்த வாசனைப்பொடியே உயர்ந்தது என்று சீவகன் முடிவு கூறினான்.

கட்டியங்காரனது பட்டத்து யானை மதங் கொண்டு தெருவை அடைந்தது. அவ்வழியில் வந்த குணமாலை அதனிடம் அகப்பட்டாள். நல்ல வேளை! அவ்வமயம் சீவகன் அங்குத் தோன்றி னான். அவன் அந்த யானையை அடக்கிக் குண மாலையைக் காத்தான். பின்பு அவள் சீவகனை மணந்துகொண்டாள்.

சீவகன் பலநாடுகளைக் காணவிரும்பி யாத்திரை செய்தான். அவன் ஒரு நாள் பல்லவ நாட்டை அடைந்தான்; அந்நாட்டு அரசனோடு நட்புக் கொண்டான். அவனது தங்கை பதுமை என்பவ ளைப் பாம்பு கடித்தது. சீவகன் மந்திர வலிமையால் அவளை உயிர் பெறச் செய்தான். அரசன் மகிழ்ந்து பதுமையைச் சீவகனுக்கே மணம் செய்வித்தான்.

பின்பு சீவகன் க்ஷேமமாபுரம் என்னும் ஊரை அடைந்தான்; அங்கு ஒரு வணிகனோடு நட்புக் கொண்டான்; அவனது வீட்டிற்கு விருந்துண்ணச் சென்றான். அவ்வணிகனுக்குக் க்ஷேமசிரி என்ற பெயர் கொண்ட அழகிய மகள் இருந்தாள். வணிகன் அவளைச் சீவகனுக்கு மணம் செய்வித்தான்.

சீவகன் பின்பு ஏமமாபுரம் என்னும் ஊரின் சோலை யில் தங்கினான். அப்போது அந்நாட்டு அரசன் மகன் அங்கு வந்தான்; ஒருமாங்கனியை வீழ்த்தப் பல அம்புகளை எய்தான். ஆனால் பழம் விழவில்லை.

சீவகன் அவனுடைய வில்லையும் அம்பையும் வாங்கி எய்தான். உடனே பழம் வீழ்ந்தது. அவ்விளைஞன் அவனை அழைத்துச் சென்று நிகழ்ந்ததை அரசனிடம் கூறினான். அரசன் மகிழ்ந்து, தன்மக்களுக்கு வில்வித்தை கற்பிக்கும்படி அவனை வேண்டினான். சீவகன் அங்குத் தங்கியிருந்தபோதும், அரசன் மகளான கனகமாலை என்பவள் அவனை மணந்து கொள்ள விரும்பினாள். மன்னன்மகிழ்ச்சி அடைந்து அவள் விருப்பப்படியே மணம் செய்வித்தான்.

பின்பு சீவகன் தன்னை வந்து கண்ட நண்பர்களோடு தன் தாயைச் சென்று கண்டான்; அவளது ஆசிபெற்று இராசமாபுரத்தை அடைந்தான். அவன் ஒரு தெருவழியாகச் சென்றபோது விமலை என்ற வணிகப் பெண் பந்து விளையாடிக்கொண்டிருந்தாள். அவள் சீவகனைக் கண்டு அவனது அழகில் ஈடுபட்டாள். அவளது தந்தை அவளைச் சீவகனுக்கு மணம் செய்வித்தான்.

ஆண் பிள்ளைகளையே பார்க்கக்கூடாது என்ற விரதத்துடன் சுரமஞ்சரி என்ற வணிகப்பெண் (குணமாலையின் தங்கை) ஒரு தனி மாளிகையில் வாழ்ந்து வந்தாள். சீவகன் முதிய கிழவன் வேடம் கொண்டு அம்மாளிகைக்குச் சென்றான்; அங்குத் தங்கி, இனிமையாகப் பாடினான். அப்பாடல் சுரமஞ்சரிக்குச் சீவகனது நினைவை ஊட்டிற்று. அவள் சீவகனை மணக்க விரும்பினாள். அப்போது, கிழவன் வேடத்தில் இருந்த சீவகன் தன் வேடத்தைக்

கலைத்தான். பின்பு அவ்விருவருக்கும் திருமணம் நடைபெற்றது.

சீவகனுடைய தாய்மாமன் மகள் இலக்கணை என்பவள். அத்தாய்மாமன் ஒரு நாட்டுக்கு அரசன். அவன் சீவகன் யோசனைப்படி தன் மகளுக்குச் சுயம்வரம் ஏற்பாடு செய்தான்; பொறி ஒன்றை அமைத்து, அதனை அம்பு எய்து வீழ்த்துபவனையே இலக்கணை மணந்துகொள்வாள் என்று ஓலை போக்கினான். கட்டியங்காரன் உட்பட அரசர் பலரும் அரசிளங்குமரர் பலரும் சுயம்வரத்துக்கு வந்தனர். ஆனால் ஒருவரும் பொறியை வீழ்த்தவில்லை. சீவகன் திடீரென அங்குத் தோன்றினான்; அப் பொறியை அம்பெய்து வீழ்த்தினான்.

அப்போது கட்டியங்காரன் போருக்கு எழுந்தான். அங்கு நடைபெற்ற போரில் கட்டியங்காரனும் அவன் மக்களும் கொல்லப்பட்டனர். சீவகன் ஏமாங்கத நாட்டு மன்னனானான்; தன் மனைவியர் அனைவரையும் தனது அரண்மனைக்கு வருவித்து இன்பமாக வாழ்ந்தான்.

சீவகனுக்கு எட்டு மனைவியரிடத்தும் எட்டு ஆண் மக்கள் பிறந்தனர். சீவகன் அவர்களுக்குரிய பள்ளிப் பயிற்சியையும் போர்ப்பயிற்சியையும் அளித்தான். பல ஆண்டுகளுக்குப் பின்பு சீவகன் தன் மூத்த மகனை அரசனாக்கினான்; தன் மனைவியரைத் தன் தாயார் இருந்த சமணப்பள்ளிக்கு அனுப்பினான்; தான் துறவு பூண்டு தவம் செய்து முத்தி பெற்றான். அவன் மனைவியரும் அங்ஙனமே தவம் செய்து முத்தி பெற்றனர்.

இப்பெருங் காவியம் பல திருமணங்களைப் பற்றிக் கூறுவதால் மணநூல் என்றும் பெயர்பெற்றது. இந்நூற் செய்யுள்கள் படிக்கப் படிக்க இன்பத்தை உண்டாக்க வல்லவை. திருத்தக்க தேவர் சீவக சிந்தாமணி என்னும் பெருங்காவியத்தைப் பாடித் தமிழிலக்கிய வரலாற்றில் தமது பெயரை நிலை நிறுத்தினர்.

வாழ்க அவரது திருப்பெயர்!

———

# 5. சயங்கொண்டார்

## சோழப் பேரரசு

கி. பி. 9-ஆம் நூற்றுண்டின் கடைப்பகுதியில் ஆதித்த சோழன் என்பவன் பல்லவநாட்டைக் கைப்பற்றினுன். அவன் பல நாடுகளைக் கைப்பற்றிச் சோழர் ஆட்சியை விரிவுப்படுத்தினுன். அவனுக்குப் பின்வந்த சோழப் பேரரசரும் தங்கள் அரசை விரிவுப்படுத்தினுர்கள். அவருள் முதலாம் இராச ராச சோழனும் அவன் மகனுன இராசேந்திர சோழனும் குறிப்பிடத் தக்கவர்.

இராசராச சோழன் கிருஷ்ணையாறு வரையில் தனது பேரரசை நிலைநாட்டினுன். அவன் கடல் கடந்து இலங்கைத் தீவையும் வேறுபல தீவுகளையும் வென்முன். அவன் மகனுன இராசேந்திர சோழன் கடற்படையைச் செலுத்திக் கிழக்கிந்தியத் தீவுகளை வென்முன்; கங்கைவரையில் சென்று அரசர் பலரை வென்முன்; கங்கை நீரைக் கொண்டுவந்து, தான் புதிதாக அமைத்த நகரத்தைப் புதுப்பித்தான்; கங்கை நீரைக் கொண்டு வந்ததால் 'கங்கை கொண்ட சோழன்' எனப்பட்டான்.

அப்பேரரசற்குப் பிள்ளைகள் மூவர்; மகள் ஒருத்தி. இராசராச சோழன் தன் மகளான குந்தவ்வையைக் கீழைச் சாளுக்கிய இளவரசனுன விமலாதித்தன் என்பவனுக்கு மணம் செய்வித்தான். அந்த விமலாதித்தனுக்கும் குந்தவ்வைக்கும் பிறந்தவனே

இராசராச நரேந்திரன் என்பவன். இராசேந்திர சோழன் தன் மகளான அம்மங்கா தேவியை இந்த இராசராச நரேந்திரனுக்கு மணம் செய்வித்தான். அவ்விருவருக்கும் பிறந்தவனே வரலாற்றுப் புகழ் பெற்ற முதற் குலோத்துங்க சோழன் என்பவன்.

## முதற் குலோத்துங்கன்

முதற் குலோத்துங்கன் கீழைச் சாளுக்கிய நாட்டுக்கு(கோதாவரிக்கும் கிருஷ்ணைக்கும் இடைப் பட்ட கிழக்கு நிலப்பகுதி) உரியவன் ஆயினும், தன் தாய் வளர்த்த கங்கைகொண்ட சோழபுரத்து அரண்மனையில் வளர்க்கப்பட்டான். அக்காலத்தில் சோழர் படை மிக்க வலிமை வாய்ந்திருந்தது. அதனால் குலோத்துங்கன் சோழநாட்டிலேயே படைக் கலப் பயிற்சி பெற்றான்; தன் தாய் மாமனுடன் இருந்து அரசியல் அநுபவமும் பெற்றான்; கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினான். சோழர் வழி வழிச் சைவர்; சிறந்த சிவபக்தர். ஆதலால் குலோத் துங்கன் இளமைமுதலே சைவசமயப்பற்று மிகுந்த வனாய் இருந்தான்.

இவன் கீழைச் சாளுக்கிய நாட்டுக்கு இள வரசன் ஆனான்; ஒரு படையுடன் வடக்கே சென்று சிற்றரசர் சிலரை வென்றான். அக்காலத்தில் சோழ நாட்டை ஆண்டு வந்த அவன் அம்மானான வீரராசேந்திர சோழன் காலமானான். அவன் மகனான அதிராசேந்திரன் அரியணை ஏறினான். அவன் திறமையற்றவன். அதனால் உள் நாட்டில் குழப்பம் உண்டாயிற்று. அக் குழப்பத்தில் அவன்

கொல்லப்பட்டான். இராசராச சோழனது வழியில் பட்டத்திற்கு உரியவர் எவரும் இல்லை. அதனால் சாளுக்கிய-சோழனான நமது முதற்குலோத்துங்கன் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு வரவழைக்கப் பட்டான். அவன் கி. பி. 1070-இல் சோழப் பேரரசனாக முடிசூடிக்கொண்டான்; அது முதல் 1120 வரையில் ஐம்பது ஆண்டுகள் சோழப் பேரரசனாக விளங்கினான்.

## சயங்கொண்டார்

குலோத்துங்கன், தனது பெருநாட்டில் கலகம் விளைத்த சோழபாண்டியரை அடக்கினான்; கீழ்ப் படியாத சிற்றரசர் பலரையும் நடுங்கச்செய்தான். அவன் பகைவர்க்கு எமன் போன்றவன்; நண்பர்க் கும் புலவர்க்கும் இனிய பால் போன்றவன். அவன் தமிழிடத்தும் தமிழ்ப் புலவர்களிடத்தும் மிக்க மதிப்புக் கொண்டவன்; தன்னை நாடிவந்த புலவர் பெருமக்களை நன்கு வரவேற்று உபசரித்தான்.

## சோழப் பேரரசன்

சோழ நாட்டு ஊர்களுள் தீபங்குடி என்பது ஒன்று. அதனில் சமண சமயத்தவரே வாழ்ந்து வந்தனர். அவருள் சயங்கொண்டார் என்பவர் ஒருவர். அவர் தம் இளமைப் பருவத்தே தமிழ் நூல்களை நன்கு கற்றுத் தேர்ந்தார். அப் பெரியார் குலோத்துங்கனது தமிழ்ப்பற்றையும் புலவரை மதிக்கும் திறத்தையும் கேள்வியுற்றார்; அவனைச் சென்று கண்டார். மன்னன் புலவரை அன்போடு

வரவேற்ருன். "உங்கள் ஊர் எது?" என்று வினவினுன்.

புலவர், "மன்னர் பெருமானே, எனது ஊர் தீபங்குடி என்பது. அதனில் அறநூல்களைச் செய்த பெரியோர் பலர் வாழ்கின்றனர். அவ்வூர் மக்கள் தீயவற்றைச் செய்யார்; இருளில் உண்ணுர் தேனையும் மதுவையும் ஊனையும் உட்கொள்ளார்; களவு செய்யார்; பொய் உரையார்; கொலை செய்யார்; கொடியன செய்யார்", என்னும் பொருளமைந்த ஒரு செய்யுளைப் பாடினுர்.

சயங்கொண்டார் கூறிய செய்யுளின் நடையையும் பொருளையும் பாராட்டிய சோழர் பெருமான், அவரைத் தன் அவைக்களப் புலவராக அமர்த்தினுன். புலவர் சமயம் வாய்த்த போதெல்லாம் மன்னன் மனம் கவரும்படி தமது புலமையை வெளிப்படுத்திவந்தார்.

## காஞ்சியில் பேரரசன்

குலோத்துங்கன் நாடாண்ட போது சோழப் பெருநாட்டின் வட பகுதிக்குக் காஞ்சீபுரம் தலைநகரமாய் விளங்கியது. அங்கு ஓர் அரண்மனை அழகுடன் திகழ்ந்தது. அதற்கும் 'பொன் மாளிகை' என்பது பெயர். ஒவ்வொரு பேரரசரும் நாட்டின் வட பகுதியைப் பார்வையிடும்போது பொன் மாளிகையில் தங்குவது வழக்கம்.

ஒரு முறை குலோத்துங்கன் தனது பெருநாட்டைச் சுற்றி வந்தான். அப்போது அவன் பொன் மாளிகையில் தங்கினுன். அவனது வரவை அறிந்த

சிற்றரசர் பலர் அவனுக்குச் செலுத்த வேண்டிய கப்பத் தொகையைக் கொண்டுவந்து செலுத்தினர். மன்னன் அரசாங்கப் பெருங்கணக்கரைப் பார்த்து, "திறைப் பொருளைச் செலுத்தாத வேந்தர் எவ ரேனும் உளரோ?" என்று வினவினான். கணக்கர் அரசனைப் பணிந்து, "வட கலிங்க வேந்தராகிய அனந்தபன் மன் என்பவர் மட்டும் திறைப்பொருளை இருமுறை செலுத்தவில்லை", என்று பணிவுடன் கூறினர்.

அது கேட்ட காவலன் கண்கள் சிவந்தன; மீசை துடித்தது. அவன், "இப்போதே நமது சேனை கலிங்கம் நோக்கிச் செல்ல வேண்டும்; அந் நாட்டை அழித்துக் காவலனைச் சிறைப்படுத்தி இங்குக் கொண்டுவர வேண்டும்," என்று கூவி னான். அப்போது அங்கிருந்த சோழப் படைத் தலைவருள் ஒருவனான கருணாகரத் தொண்டைமான் எழுந்து காவலனைப் பணிந்தான்; "அரசர் பெரு மானே, இத் தொழிலை நானே செய்து முடிப்பேன்", என்று கூறி விடைபெற்றான்.

## கலிங்கப் படையெடுப்பு

சோழர் சேனை பல நாடுகளை வென்றதல்லவா? அப் பண்பட்ட படை ஆர்த்து எழுந்தது. கருணா கரத் தொண்டைமான் நன்கு அலங்கரிக்கப்பட்ட யானைமீது அமர்ந்து சென்றான். அவனுக்கு முன் னும் பின்னும் சோழப் படையினர் அணிவகுத்துச் சென்றனர்; போர்ப்பறை முழங்கியது. சோழப் படை வட கலிங்கத்தை நோக்கிச் சென்றது. அது வழியில் பாலாறு, குசைத்தலையாறு, பொன்முகம்

யாறு, பழவாறு, கொல்லியாறு, வடபெண்ணையாறு, மண்ணாறு, குன்றியாறு, கிருஷ்ணையாறு, கோதாவிரியாறு, பம்பையாறு, காயத்திரியாறு, கௌதமியாறு ஆகிய பல ஆறுகளைக் கடந்து வட கலிங்கத்தை அடைந்தது.

## கலிங்கப் போர்

சோழவீரர் கலிங்க நாட்டு ஊர்களுக்குத் தீயிட்டனர்; பயிர்களை அழித்தனர்; எதிர்ப்பட்ட இளைஞரைக் கொன்று குவித்தனர். இக் கொடிய செயல்களைக் கண்ட கலிங்க நாட்டுக் குடிமக்கள் நடுநடுங்கினர்; நாலாப் பக்கங்ளிலும் சிதறி ஓடினர்; அவருள் ஒரு சிலர் கலிங்கத்துக் காவலனை அணுகினர்; சோழரது படைவீரர் நாட்டை நாசப்படுத்துவதை நன்கு எடுத்துரைத்தனர்.

அது கேட்ட மன்னன், "சோழ வேந்தனே இங்கு வந்திருக்கிறானோ? அல்லது அவனது படை மட்டும் வந்திருக்கிறதா?" என்று கேட்டான். சோழன் வரவில்லை என்பதை அறிந்தவுடன், அவன் மிக்க சீற்றங்கொண்டு, "நான் சோழனது சேனைக்கு எளியவன் அல்லன். நமது கலிங்க நாடு காடு, மலை, கடல் ஆகிய அரண்களைக் கொண்டது. இவற்றை அறியாது சோழப் படை இங்கு வந்தது அறியாமை. சிங்கத்தை அதன் குகையிலே எதிர்க்க வந்த அறிவிலியின் செயலை ஒத்தது, சோழப் படை நமது நாட்டிற்கு வந்திருப்பது. நாம் அதனை முறியடிப்போம்", என்று சீற்றத்துடன் கூறினான்.

கலிங்க நாட்டு அமைச்சருள் எங்கராயன் என்பவன் ஒருவன் ; அமைச்சர் இலக்கணம் முழுமையும் அமையப் பெற்றவன். 'மந்திரிக்கழகு வரும் பொருள் உரைத்தல்' அல்லவா ? அவன் சோழர் படையின் சிறப்பைத் தன் காவலனுக்கு நன்கு உணர்த்த விரும்பினான். அவன் காவலனைப் பணிந்து, "அரசே, இங்கு வந்துள்ள சோழப்படை போரில் மிக்க அநுபவம் வாய்ந்தது. இப்படைதான் முன்பு பாண்டியர் ஐவரையும் வென்றது ; பல ஊர்களை வென்றது. சோழரது ஆட்சி பெரிய நிலப் பகுதியில் பரவியிருப்பதற்கு இப்படையே காரணமாகும். இப்படையை நடத்தி வந்துள்ள கருணாகரத் தொண்டைமான் மிகச் சிறந்த வீரன்; பகைவரை அழிப்பதில் பெயர் பெற்றவன். நாம் அவனை எதிர்த்து வெல்லுதல் அரிது. யான் இப்பொழுது கூறுவது உமக்குக் கோபத்தை உண்டாக்கும். ஆயினும், போர் நடைபெறும் போது நான் சொன்னது உமது நினைவிற்கு வரும்," என்று பணிவோடு தெரிவித்தான்.

கலிங்கத்துக் காவலன் கண்களை உருட்டி அமைச்சனை நோக்கினான் ; " என் ஆற்றலை அறியாது கூறினாய்," என்று கடிந்துரைத்தான்; உடனே போர் தொடங்கும்படி தம் படைத்தலைவர்க்கு ஆணையிட்டான்.

சோழர் படையும் கலிங்கர் படையும் கடும் போர் புரிந்தன. யானை வீரர் யானை வீரரை எதிர்த்தனர்; குதிரை வீரர் குதிரை வீரரைத் தாக்கினர்; காலாட்படையினர் காலாட்படையினரை எதிர்த்

தனர். போர் கடுமையாக நடைபெற்றது. போர்க் களத்தில் குறுதியாறு பெருக்கெடுத்தது. வானத்தில் காக்கைகளும் பருந்துகளும் வட்டமிட்டன. போர்க் களத்தில்யானைகளும் குதிரைகளும் வெட்டுண்டன. வீரர்கள் கைகளையும் கால்களையும் இழந்தனர். கலிங்கப்படை சிறிது சிறிதாக அழிந்து தேய்ந்தது. பாவம்! வீரம் பேசிய அனந்தபன்மன் எவருக்கும் தெரியாமல் ஓடி ஒரு மலைக்குகையினுள் ஒளிந்து கொண்டான். உயிர்தப்பிய கலிங்கவீரர் துறவிகள் போல் வேடமிட்டு ஓடி ஒளிந்தனர்.

## வெற்றியும் பாராட்டும்

சோழப் படைவீரர் இறுதியில் கலிங்கத்துக் காவலனைச் சிறைப்படுத்தினர்; அவனைக் கொண்டு சென்று குலோத்துங்கன் முன்னிலையில் நிறுத்தினர். தனது படை வெற்றி பெற்றதைக் கண்ட சோழன் களிப்படைந்தான்; தன் படைத் தலைவனுக்கும் வீரர்க்கும் பட்டங்களையும் பரிசுகளையும் வழங்கினான்; கலிங்கத்துக் காவலனை மன்னித்து, அறிவுரை கூறிக் கலிங்க நாட்டிற்கு அனுப்பிவிட்டான்.

## கலிங்கத்துப் பரணி

குலோத்துங்கனது அவைப்புலவரான சயங்கொண்டார் இக்கலிங்கப் போரைப் பற்றிய எல்லா விவரங்களையும் நன்கறிந்தார்; வரலாற்றுப் புகழ்பெற்ற இப்போரைப் பற்றி ஒரு நூல் பாடவேண்டும் என்று விரும்பினர்; கலிங்கத்துப்பரணி என்னும் பெயர் கொண்ட நூலைப் பாடினர். கலிங்கப்போரை நேரிற்

கண்ட பேய்கள் காளிதேவிக்குக் கூறுவதுபோல இந்நூல் பாடப்பட்டுள்ளது.

இதன்கண், குலோத்துங்கனுக்கு முற்பட்ட சோழமன்னரின் வீரச்செயல்களும் நற்செயல்களும் குறிக்கப்பட்டுள்ளன; குலோத்துங்கனுடைய வீரச் செயல்களும் நற்பண்புகளும் விளக்கப்பட்டுள்ளன; கலிங்கப் போரைப்பற்றிய விவரங்கள் எல்லாம் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூற் செய்யுட்கள் மிக்க சுவையுள்ளவை; படிப்பவர் உள்ளத்தைக் கவர்பவை.

இந்நூலுக்குப் பின்பு பரணி நூல்கள் பல தமிழில் தோன்றின. ஆயினும். இக்கலிங்கத்துப் பரணியே பரணி நூல்களுள் தலைசிறந்ததாக விளங்கி வருகிறது "பரணிபாடுவதில் சயங்கொண் டார்க்கு இணையானவர் இல்லை," என்று பிற்காலப் புலவர் பாராட்டினர். நீங்கள் மேல் வகுப்புகளில் இந்த நூலைப்பற்றி நன்கறிய வாய்ப்பு உண்டாகும். வரலாற்றுச் சிறப்புடைய இந்நூல் சோழப் பேரரசர் காலத்திய நூல்களுள் மிகச் சிறந்ததாகும்.

# 6. சேக்கிழார்

## குன்றத்தூர்ச் சேக்கிழார்

சேக்கிழார் என்ற புலவர் கி. பி. 12-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். அவர் சென்னையை அடுத்துப் பதினுன்கு கல் தொலைவிலுள்ள குன்றத்தூர் என்னும் ஊரைச் சேர்ந்தவர். அவர் தொண்டைமண்டல சைவ வேளாளர்.

'சேக்கிழான்' என்பது ஒரு குடியின் பெயர். இக்குடியைச் சேர்ந்த பலர் அக்காலத்தில் சோழப் பேரரசின் உயர் அலுவலராக இருந்தனர் என்பது கல்வெட்டுக்களால் தெரிகின்றது. சேக்கிழான் பரம்பரையினருள் குன்றத்தூர் சேக்கிழார் பரம்பரை ஒன்ருகும். அப்பரம்பரையில் வந்தவரே பெரிய புராணம் இயற்றிய சேக்கிழாராவர்.

குன்றத்தூரில் ஒருகுன்று இருக்கிறது. அதனுல் அவ்வூர் குன்றத்தூர் என்று பெயர் பெற்றது. அவ்வூருக்கு அருகில் திருநாகேசுவரம் என்னும் ஓர் ஊர் இருக்கின்றது. அவ்வூரில் சேக்கிழார் ஒரு சிவன் கோவிலைக் கட்டுவித்தார். அக்கோவிலின் பெயரே திருநாகேசுவரம் என்பது. நாளடைவில் கோவிலின் பெயரே ஊரின் பெயராயிற்று. திருநாகேசுவரம் சேக்கிழார் காலத்தில் குன்றத்தூரின் ஒரு பகுதியாக விளங்கியது. செம்பரம்பாக்கம் ஏரிப் பாய்ச்சலால் குன்றத்தூர் வயல் வளத்தில் சிறந்திருந்தது.

## கல்வி கற்றல்

சேக்கிழார் இளமையில் இலக்கண இலக்கிய நூல்களை நன்கு கற்றார்; செய்யுள் இயற்றும் திறமை பெற்றார். அவர் இளமை முதலே சைவசமயத்தில் ஆழ்ந்த பற்றுடையவராய் இருந்தார். அவர் திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர் மாணிக்க வாசகர் முதலிய சைவப் பெருமக்கள் பாடியருளிடைய அருட்பாடல்களை நன்குபடித்தார்; தமிழ் நூல்களிலும் சைவ சமய நூல்களிலும் சிறந்த அறிஞர் என்று பெயர் பெற்றார்.

## அமைச்சராதல்

சேக்கிழார் வாழ்ந்த காலத்தில் தமிழகத்தை இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆண்டுவந்தான். அவன் மிகச்சிறந்த சிவபக்தன். தில்லைக்கூத்தப் பிரானிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவன். அதனால் அவன் தில்லையிலேயே ஒரு பெரிய மாளிகையைக் கட்டுவித்தான்; அங்குத் தங்கியிருந்து அடிக்கடி கோவிலுக்குச் சென்றுவந்தான். அவன் ஒட்டக் கூத்தரிடம் கல்வி பயின்றவன்; கவிபாடும் ஆற்றல் பெற்றவன். அதனால் அவன் தமிழ்ப் புலவர்களை அன்போடு வரவேற்று உபசரித்தான்; சைவப் பெரியார்களையும் சிறப்பித்தான்; தமிழ்ப் புலமையிலும் சைவநூல் அறிவிலும் சிறந்தவரை மிகுதியாகப் பெருமைப்படுத்தினன்.

குலோத்துங்கன் ஆட்சியில் போர்கள் இல்லை; நாட்டில் குழப்பங்கள் இல்லை; குடிமக்கள் அமைதி யாகத் தத்தம் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இங்ஙனம் அமைதியான முறையில் நாட்டை ஆண்டு வந்த குலோத்துங்கன், நமது சேக்கிழாரது தமிழ்ப் புலமையையும் சைவ நூற்புலமையையும் பற்றிக் கேள்வியுற்ருன்; அவரைக் காண விரும்பினுன்; அவருக்கு அழைப்பு விடுத்தான்.

சேக்கிழார் அவ்வழைப்பை ஏற்றுச் சோழர் தலைநகரமான கங்கைகொண்ட சோழபுரத்திற்குச் சென்ருர்; அரண்மனையுள் சென்று சோழப் பேரரசனை வணங்கினுர்; அவனேடு சிறிது நேரம் உரையாடினுர். சேக்கிழாருடைய அடக்கத்தையும் நாவன்மையையும் பழுத்த புலமையையும் புரவலனுன கோமகன் நன்கு உணர்ந்தான்; அவர் என்றும் தன்னுடன் இருப்பதை நலமெனக் கருதினுன். அரசியல் தொடர்பாக அவரைப் பல கேள்விகள் கேட்டான். சேக்கிழார் அவ் வினுக்களுக்கு ஏற்ற விடைகளை அளித்தார். குலோத்துங்கன் மிக்க மகிழ்ச்சி அடைந்தான். அவரைத் தன் முதலமைச்சராக இருக்கும்படி வேண்டினுன். சேக்கிழார் அவனது வேண்டுகோளுக்கிணங்கிச் சோழப் பேரரசின் முதல் அமைச்சரானுர்.

தல யாத்திரை

சோழப் பேரரசு தமிழகத்தில் ஏறத்தாழக் கி.பி. தொள்ளாயிரம் முதல் ஆயிரத்துமுந்நூறு வரையில் இருந்தது. அதற்கு முன்பு தமிழகத்தின் பெரும் பகுதி பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. பல்லவர் ஏறத்தாழக் கி. பி. 300 முதல் 900 வரையில் காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு தமிழகத்தின்

பெரும் பகுதியை ஆண்டுவந்தனர். அவர்கள் காலத்தில் நாயன்மார் என்ற சைவ சமயப் பெரியார் அறுபத்துமூவர் தமிழகத்தில் வாழ்ந்துவந்தனர். அவருள் திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் சுந்தரர் என்பவர் குறிப்பிடத்தக்கவர். அவர்கள் தமிழகம் முழுவதிலும் இருந்த சிவன் கோவில் களுக்குச் சென்றனர்; ஒவ்வொரு கோவிலிலும் பக்திப்பாடல்களைப் பாடினர். அம்மூவர் காலத் திலேயே நாயன்மார் பலர் வாழ்ந்தனர். அவர்களும் தத்தம்மால் இயன்ற அளவு சைவ சமய வளர்ச் சிக்குப் பாடுபட்டனர்.

திருஞான சம்பந்தர் பாடிய பாடல்கள் ஏறத் தாழ மூவாயிரம் பாடல்களாகும். இவ்வாறே திரு நாவுக்கரசர் பாடிய பாடல்களும் ஏறத்தாழ மூவா யிரம் பாடல்கள் என்று சொல்லலாம். சுந்தரர் ஏறத் தாழ ஆயிரம் பாடல்களைப் பாடியுள்ளார். அப் பாடல்கள் சேக்கிழார் காலத்தில் பனை ஓலைகளில் எழுதப்பட்டிருந்தன. சேக்கிழார் அவற்றை நன்கு படித்தார்.

சேக்கிழார் முதலமைச்சர் என்ற முறையில் சோழப் பெருநாட்டைச் சுற்றிப் பார்க்க வேண்டியவ ரானார். அவர் அங்ஙனம் சென்றபோது நாயன்மார் பிறந்து வளர்ந்த ஊர்களைப் பார்வையிட்டார்; அவர் களது பாடல் பெற்ற ஒவ்வொரு கோவிலையும் தொழுதார்; பல கோவில்களில் இருந்த நாயன்மார் திருவுருவச் சிலைகளை ஆராய்ந்தார்; நாயன்மார் வாழ்ந்த ஊர்களில் இருந்த முதியவரிடம் அந் நாயன்மார் பற்றிய செய்திகளைக் கேட்டு அறிந்தார்.

## பெரிய புராணம் பாடுதல்

சேக்கிழார் நாயன்மார் வரலாறுகளை அரசனுக்குக் கூறி வந்தார். அரசன் அவற்றைப் பெரிய நூலாகப் பாடும்படி வேண்டினான். சேக்கிழார் முதலில் அஞ்சினார். அரசன் மேலும் மேலும் வற்புறுத்தினான். "நாயன்மார் வரலாறுகளை நாம் பாட வேண்டும் என்பது இறைவனது விருப்பமாக இருத்தல் வேண்டும். அதனால்தான் அரசன் நம்மை வற்புறுத்துகின்றான்" என்று சேக்கிழார் எண்ணினார்; இறுதியில் நூல் பாட இசைந்தார்.

சேக்கிழார் தில்லைத் திருக்கோவிலுக்குச் சென்றார்; பெரிய புராணம் பாடத் தமக்கு அருள் புரிய வேண்டும் என்று கூத்தப் பெருமானை வேண்டினார். அவ்வமயம் 'உலகெலாம்' என்னும் ஒரு தொடர் அவர் காதில் பட்டது. சேக்கிழார் அதனையே முதலாகக் கொண்டு பெரிய புராணம் பாடத் தொடங்கினார். அப்புராணத்தில் சுந்தரர் வரலாறே சிறந்து விளங்குவது. சுந்தரரால் பாடப் பெற்ற அறுபத்திரண்டு நாயன்மார் வரலாறுகளையும் சுந்தரர் வரலாற்றுக்கு இடையில் வைத்துச் சுந்தரர் வரலாற்றைச் சேக்கிழார் பாடி முடித்தார். சுந்தரருக்குத் 'திருத்தொண்டர்' என்று ஒரு பெயரும் உண்டு. அதனால் சேக்கிழார் தாம் பாடிய நூலுக்குத் திருத்தொண்டர் புராணம் என்று பெயரிட்டார். அப்புராணமே நாளடைவில் 'பெரிய புராணம்' என்று பெயர் பெற்றது.

## பெரிய புராணம்

பெரிய புராணம் ஏறத்தாழ 4200 செய்யுட்களைக் கொண்டது. அதன்கண் இடம் பெற்றுள்ள நாயன்மார் பல ஊர்களைச் சேர்ந்தவர்கள் ; பலநாடுகளைச் சேர்ந்தவர்கள். ஆதலால், பெரிய புராணத்தில் பல நாடுகளைப் பற்றிய வருணனைகளும் பல ஊர்களைப் பற்றிய வருணனைகளும் இடம்பெற்றுள்ளன. நாயன்மார் பல சாதியினர்; ஆதலால் பல சாதியினர் பழக்க வழக்கங்களும் அந்நூலில் குறிக்கப்பட்டுள்ளன. நாயன்மார் செய்தனவாகச் செயற்கரிய செயல்கள் பல பெரிய புராணத்தில் குறிக்கப்பட்டுள்ளன. அந்நூலின் செய்யுட்கள் எளிமையும் இனிமையும் வாய்ந்தவை. பல்லவர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்களுடைய வரலாறுகளைக் கூறுகின்ற நூலாதலால் பெரிய புராணத்தில் பல்லவர் காலத்து வரலாற்றுச் செய்திகள் சிலவும் இடம் பெற்றுள்ளன. மருத்துவக் கலை, நடனக் கலை, இசைக்கலை முதலிய கலைகளைப் பற்றிய விவரங்கள் அந்நூலில் இடம் பெற்றுள்ளன.

## சேக்கிழார் சிறப்புப் பெறுதல்

பெரிய புராண அரங்கேற்றம் தில்லைக் கூத்தப் பெருமானின் கோவிலில் உள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் நடந்தது. குலோத்துங்க சோழன் முன்னிலையில்—சைவ அறிஞர் பலர் முன்னிலையில்—அவ்வரங்கேற்றம் நடைபெற்றது. பலரும் பாராட்ட, நூல் அரங்கேறியது.

மன்னன் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான்; சேக்கிழாரையும் அவர் செய்த பெரிய புராணத்தையும் யானைமீது ஏற்றினான்; தான் சேக்கிழாருக்கு அருகில் இருந்து கவரி வீசினான். சோழப் பேரரசனான குலோத்துங்கன் புலவருக்குக் கவரி வீசினான் என்பது கவனிக்கத்தக்கது. சிவ பக்தனான அப் பேரரசன் சேக்கிழாருக்குத் தொண்டர்சீர் பரவுவார் என்னும் பட்டத்தை வழங்கினான்; அவருக்குப் பல சிறப்புக்கள் செய்தான். சிற்றரசரும் பிறரும் சேக்கிழாரைப் பெருமைப்படுத்தினர்.

## அழியாத இடம்

சேக்கிழார் கும்பகோணத்திற்கு அருகில் திருநாகேசுவரம் கோவிலிடத்து மிக்க ஈடுபாடு கொண்டவர். அவர் அதனால்தான் தமது குன்றத்தூரில் திருநாகேசுவரம் என்ற கோவிலைக் கட்டுவித்தார். சேக்கிழார் தமது பதவியிலிருந்து விலகிக் குன்றத்தூரில் குடிபுகுந்தார். அவர் வாழ்ந்த இல்லமே இன்று குன்றத்தூரில் அவர் கோவிலாக விளங்குகிறது. அவர் தம்பியின் பெயர் பாலறாவாயர் என்பது. அப் பெயரால் குன்றத்தூரில் ஒரு திருக்குளம் இருக்கின்றது. சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தைச் செய்தமையால் தமிழ் இலக்கிய உலகில் அழியாத இடத்தைப் பெற்றார்.

# 7. கம்பர்

இவர் தமிழில் இராமாயணம் என்னும் மிகப்பெரிய செய்யுள் நூலைப் பாடியதால் தமிழர் உள்ளங்களில் நிலைத்த இடத்தைப் பெற்றுவிட்டார். இவர் மிகப் பெரிய புலவர். ஆயினும் இவரது உண்மை வரலாறு தெளிவாகத் தெரியவில்லை.

கம்பர்

காளி கோயில் பூசாரிகள் உவச்சர் எனப்படுவர். அவர்கள் வேறு கோவில்களிலும் சில பணிகள் செய்துவந்தனர். அம்மரபினர் இன்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கின்றனர். அவர்களது இயற்பெயரை அடுத்துக் கம்பர் என்னும் பெயர் இன்றும் வழங்கப்படுகிறது. முத்து சாமிக் கம்பர், வீரா சாமிக் கம்பர் என்னும் பெயர்களை இன்றும் காணலாம். இம்மரபினருள் பலர் இப்பொழுதும் காளி கோயில் பூசாரிகளாக இருக்கின்றனர். சிலர் வேறு கோவில்களிலும் பொறுப்புள்ள பணிகளைச் செய்கின்றனர். பின்னும் சிலர் மேளம் வாசிப்பதில் வல்லவராய் இருக்கின்றனர். இவ்வுண்மைகளை நோக்கச் சேக்கிழார் என்பது குடிப்பெயராக விளங்கியது போலவே கம்பர் என்பது உவச்சர் குடியினருக்கு வழங்கிவரும் பொதுப் பெயராக இருக்கலாம் என்று கருதுவது பொருத்தமாகும். இவரது சிறப்புக் கருதி மக்கள் இவரது இயற்பெயரை மறந்து, குடிப் பெயராலேயே இவரை அழைக்கலாயினர் என்று கொள்ளுவது மிகவும் பொருத்தமாகும்.

## கம்ப நாடர்

கம்பநாடு என்பது சோழநாட்டில் மாயூரம் என்னும் நகரைச் சுற்றியுள்ள பகுதிக்குப் பெயராக இருந்திருக்கலாம் என்பது அறிஞர் கருத்து. அப் பகுதியிலுள்ள திரு அழுந்தூர் என்னும் சிற்றூரில் கம்பர் மேடு என்பது ஒரு மனைக்குப் பெயராக இருக் கின்றது. "கம்பர் வீட்டில் நாள்தோறும் புதிய மட் பாத்திரங்களில் சமையல் செய்வது வழக்கம். ஒவ் வொரு நாளும் சமைத்துக் கழித்த கலங்கள் வீட்டுக் கொல்லையில் எறியப்பட்டனவாம். அவை நாளடை வில் மேடிட்டன. அம்மேடே 'கம்பர் மேடு' எனப் பெயர் பெற்றது." என்று ஒரு செய்தி கூறப்படு கிறது. இச்செய்தி இன்றும் திரு அழுந்தூரில் கூறப் பட்டு வருகிறது. சில செய்யுட்களிலும் கம்பர் திருவழுந்தூரைச் சேர்ந்தவர் என்பது கூறப்பட் டுள்ளது. எனவே, கம்பர் சோழநாட்டுத் திருவழுந் தூரைச் சேர்ந்தவர் என்று கருதுதல் பொருத்த மாகும்.

## சடையப்ப வள்ளல்

வெண்ணெயூர் என்பது சோழநாட்டு ஊர் களில் ஒன்று. அது வயல் வளத்தில் சிறந்த ஊர். அவ்வூரில் சடையர் என்னும் பெயர் கொண்ட வள்ளல் ஒருவர் கம்பர் காலத்தில் வாழ்ந்தார். அவர் கம்பரது தமிழ்ப்புலமையைப் பற்றிக் கேள்வியுற்றார்; அவரை வருவித்து நட்புக் கொண்டார்; அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். அவர் தம்மை நாடிவந்த புலவர்க்கு உணவும் உடையும் வழங்

கினுர். அவரது கொடைத்தன்மையைப் பாராட்டி அக்கால மக்கள் அவரை வள்ளல் என்று பாராட்டினர். அவர் சடையப்ப வள்ளல் என்று அழைக்கப்பட்டார்.

## அரசனது அறிமுகம்

சடையப்ப வள்ளல் சோழப் பேரரசனுக்கு நெருங்கிய நண்பராய் இருந்தார். அப்பொழுது இருந்த சோழப் பேரரசன் மூன்ரும் குலோத்துங்கன் என்பவன். அவன் சிறந்த போர்வீரன்; பெரும் படையுடன் சென்று பாண்டியரை அடக்கியவன்; சிற்றரசரின் குழப்பங்களை அடக்கியவன். அப்பெருமகன சிறந்த சிவபக்தன்; கும்பகோணத்தை அடுத்த திரிபுவனம் என்னும் ஊரில் பெரிய சிவன் கோயிலைக் கட்டினவன். அவனுடைய விருதுப் பெயர்களுள் திரிபுவன வீரதேவன், தியாக விநோதன் என்பன குறிக்கத்தக்கவை. அவன் திரிபுவனத்தில் கட்டிய சிவன் கோவில் திரிபுவன வீரேசுவரம் என்று அவனது பெயரைப் பெற்றது.

சடையப்ப வள்ளல் கம்பரது புலமையைப்பற்றித் தியாக. விநோதனிடம் ஒருநாள் கூறிஞர். தமிழ்ப்புலவர்களிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந்த சோழப் பேரரசன் கம்பரைக் காண விழைந்தான். அதனுல் சடையப்ப வள்ளல் ஒருநாள் கம்பரை அழைத்து வந்து அரசனுக்கு அறிமுகப்படுத்திஞர். காவலன் கம்பரோடு உரையாடினுன். உலக அநுபவம் நிறைந்த கம்பருடைய பேச்சுக்கள் காவலன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அரசன்

அவரைத் தன் அவைப்புலவராக ஏற்றுக்கொண்டான். நாட்கள் செல்லச் செல்லக் கம்பர்-காவலன் நட்பு வளர்பிறை போல வளர்ந்தது.

*இராமாயணம் பாடியது*

கம்பர் வாழ்ந்த காலத்தில் இராமன் வரலாறு நாட்டில் பெருவழக்காக இருந்தது. தமிழில் இராமன் வரலாற்றைக் கூறும் நூல்கள் இருந்து அழிந்தன. மக்கள் இராமனது வரலாற்றை விரிவான முறையில் அறிந்துகொள்ள விரும்பினர். மன்னனே அவரைத் தூண்டினனோ, அல்லது சடையப்பரே விரும்பினரோ, அல்லது கம்பரே இராமாயணம் பாட விரும்பினரோ உண்மை தெரியவில்லை. கம்பர் இராமாயணம் பாடத் தொடங்கினர்.

வடமொழியில் வால்மீகிமுனிவர் செய்த இராமாயண நூல் ஒன்று உண்டு. அதுவே பழைய நூல். அதற்குப் பிறகு இராமாயண நூல்கள் பல வடமொழியில் செய்யப்பட்டன. கம்பர் அந்நூல்களின் துணையைக் கொண்டு இராமாயணம் பாடினர். அவர் பாடிய இராமாயணம் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களை உடையது. ஒவ்வொரு காண்டமும் பல படலங்களைக் கொண்டுள்ளது. கம்பர் பாடியுள்ள செய்யுட்கள் பதினாயிரத்து ஐந்நூருகும்.

கம்பர் மிகச்சிறந்த தமிழ்ப்புலவர். அவர் தமக்கு முற்பட்ட தமிழ் இலக்கண இலக்கிய நூல்

களை நன்கு கற்றவர்; உலக அநுபவத்திலும் தேர்ந்தவர்; சிறந்த வைணவப்பற்று உடையவர். ஆயினும் சமய சமரச நோக்கமும் உடையவர்; ஆதலால் அவருடைய இராமாயணச் செய்யுட்கள் அவருடைய புலமையையும், வைணவப்பற்றையும், உலக அனுபவத்தையும், சமரச மனப் போக்கையும் மிகத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

அவரது இராமாயண நூலைத் திருவரங்கம் கோவிலில் கூடிய வைணவப் பெரியார்கள் ஏற்றுக் கொண்டனர்; அவரைக் 'கம்ப நாட்டு ஆழ்வார்' என்று கூறிப் பாராட்டினர். நாடு முழுதும் கம்பரது பெரும்புலமை பரவியது.

## புலவர் சூழ்ச்சி*

அரசன் கம்பர்மீது அளவற்ற பற்றுக்கொண்டிருப்பது கண்டு அவைப்புலவர் அவர்மேல் பொறாமை கொண்டனர்; அவரது பெருமையைக் கெடுக்க ஒரு சூழ்ச்சி செய்தனர். அவர்கள், அரசனுக்கு நாவிதன் தொழில் செய்யும் ஒருவனை அடைந்து, "உனக்குப் பெரும் பொருள் தருவோம். நாளை அரசவையில் புதிய புலவர் இருக்கும் பொழுது நீ ஓடி வந்து அரசன் காண அவரைத் தழுவிக் கொள். கடல் கடந்து சென்ற உன் தமையனே

---

* இக்கதை எந்த அளவு உண்மை என்பது தெரியவில்லை. இவ்வாறு பல கதைகள் கம்பரைப் பற்றிக் கூறப்படுகின்றன. மாதிரிக்காக ஒரு கதை இங்குத் தரப்பட்டுள்ளது. கம்பர் சோழனிடம் கோபித்துக்கொண்டு, மாறுவேடம் பூண்டு, சேரனது அவைப் புலவராயிருந்தபொழுது இது நடந்ததாம்.

அவர் என்று கூறி, அவரை உன் வீட்டிற்கு அழைத்துச்செல். அவர் நாவிதர் என்று அரசன் எண்ணி, அவரை அவைப்புலவர் பதவியிலிருந்து நீக்கிவிடுவான்,'' என்று கூறினர். நாவிதன் பணத்தாசையால் அவர்கள் சொன்னபடி நாடகம் நடிக்க ஒப்புக்கொண்டான்.

மறுநாள் அரசவையில் கம்பர் எழுந்து பேசிக்கொண்டிருந்தார். அப்போது நாவிதன் அங்கு வந்து நின்றான்; கம்பரை உற்றுப் பார்த்தான். பின்பு "அண்ணா" என்று கூவிக்கொண்டே ஓடி அவரைத் தழுவிக்கொண்டு அழுதான்; "அண்ணா தாங்கள் கடல்கடந்த நாட்டில் இருப்பதாக அல்லவோ நான் எண்ணிக்கொண்டிருந்தேன் தாங்கள் எப்பொழுது இங்கு வந்தீர்கள்? தாங்கள் உடனே என் வீட்டிற்கு வரவேண்டும்'' என்று ஏதேதோ பேசினான். அரசன் முகம் வாடியது. அவைப் புலவர்கள் கம்பரை ஏளனமாகப் பார்த்தனர். ஏனையோர் திடுக்கிட்டனர். கம்பர் உண்மையை உணர்ந்தார்; சூழ்ச்சியைக் சூழ்ச்சியால் வெல்லவேண்டும் என்று எண்ணினர்; உடனே நாவிதனைத் தழுவிக்கொண்டு பொய்யாக அழுதார்; "மன்னவா, யான் என் தம்பியின் வீட்டுக்குச் சென்று வருகிறேன்' என்று கூறிவிட்டு நாவிதனுடன் நடந்தார்.

முன்னேற்பாட்டின்படி நாவிதன் மனைவியும் மக்களும் கம்பரை அன்போடு வரவேற்றனர். கம்பர் நாவிதனை அன்போடு பார்த்து, "தம்பி, நீ நாள் தோறும் நமது அரசனுக்கு நாவிதத் தொழில்

செய்கிறாய் அல்லவா? நான் இங்கு வந்துவிட்டதால், இனி அத்தொழிலை மேற்கொள்வேன். நாம் இருவரும் மாறி மாறி அரசனுக்குத் தொழில் செய்வோம். நாளை நான் அரண்மனைக்குச் செல்வேன்'', என்றார். நாவிதன் அதற்கு இசைத்தான்.

கம்பர் மறுநாள் காலையில் அரண்மனைக்குச் சென்றார்; வழியில் கலைமகளை வேண்டி, அவளுடைய கால் சிலம்புகளுள் ஒன்றைப் பெற்றுக் கொண்டார்; அத்துடன் அரசனைச் சென்று கண்டார்; "அரசே, என் தந்தையார் சொத்தை நானும் என் தம்பியும் பிரித்துக்கோண்டோம். என் பாகத்திற்கு இச் சிலம்பு கிடைத்தது. இது நமது கோப்பெருந் தேவியாருக்கே உரியது. மற்றொரு சிலம்பு என் தம்பியிடம் இருக்கிறது'', என்று கூறினார்.

சிலம்பு காவலன் கண்களைக் கவர்ந்தது. அவன் உடனே நாவிதனை வரவழைத்தான். நாவிதன் வருவதற்குள் சபை கூடிவிட்டது. நாவிதன் நடுங்கிக்கொண்டே வந்தான். கம்பர் அவனைத் தழுவி, "தம்பி, நேற்று நீ கொடுத்த சிலம்பை நான் அரசருக்குக் கொர்டுத்துவிட்டேன். உன்னிடம் உள்ள சிலம்பையும் அரசருக்குக் கொடுத்துவிடு. நமது கோப்பெருந்தேவியார் அவற்றை அணிந்து கொள்ளட்டும்'', என்றார். நாவிதன் பதைபதைத்தான்; "என்னிடம் சிலம்பு இல்லையே!'' என்று கூவினான்.

உடனே அரசன் தன் ஏவலரைப் பார்த்தான். அக் குறிப்பை உணர்ந்த ஏவலர் நாவிதனை நையப் புடைத்தனர். நாவிதன் அலறினன்; மன்னன் கால்களில் வீழ்ந்து பணிந்தான்; "அரசே, உண்மையைக் கூறிவிடுகிறேன். இவர் என் தமையனார் அல்லர் இங்குள்ள புலவர்கள் எனக்குப் பணம் தருவதாகக் கூறி, இந் நாடகம் நடிக்கச் செய்தனர். நான் பண ஆசையால் இந் நாடகம் நடித்தேன் என் பிழையைப் பொறுத்தருள வேண்டும்", என்று வேண்டினன்.

மன்னனுக்கு உண்மை விளங்கியது. அவன் அவைப் புலவரைப் பார்த்தான்; அவைப் புலவர் தரையைப் பார்த்தனர்; பின்பு தம் தவற்றை ஒப்புக் கொண்டு மன்னிப்பு வேண்டினர். புலவர்களின் இத்தகாத செயலால் கம்பரது மதிப்பு உயர்ந்தது.

அரசன் கம்பரைப் பார்த்து, "இச் சிலம்பு உமக்கு எவ்வாறு கிடைத்தது?" என்று கேட்டான். கம்பர், தாம் அதனைப்பெற்ற விபரத்தைக் கூறினர். அப்பொழுது "கம்பா, என் சிலம்பு எங்கே?" என்று அசரீரியாக ஒரு குரல் கேட்டது. கம்பர் சிலம்பைக் கையில் ஏந்தினர். உடனே அவரது கையில் இருந்த சிலம்பு திடீரென்று மறைந்துவிட்டது. இந்த அற்புதத்தைக் கண்ட அரசனும் அவையோரும் வியப்புற்றனர். காவலன் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்து கம்பரைத் தழுவிக்கொண்டான்.

# 8. உமறுப் புலவர்

## ஜமீந்தாரும் புலவரும்

மதுரையில் நாயக்கராட்சி இருந்த 17-ஆம் நூற்றாண்டில் தென்னாட்டில் பாளையப்பட்டுகளும் ஜமீன்களும் பெருகியிருந்தன. அவற்றுள் எட்டையபுர ஜமீன் ஒன்றாகும். அது திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டிக்கு அண்மையில் உள்ளது. எட்டையபுர ஜமீந்தார்கள் தெலுங்கர்கள்; ஆயினும் தமிழ் நாட்டில் வாழ்ந்த காரணத்தால் தமிழில் நல்ல பயிற்சி பெற்றனர்; தமிழில் வல்ல புலவர்களை நன்கு ஆதரித்தனர்.

எட்டையபுர ஜமீந்தாருள் வெங்கடேசுவர எட்ட பூபதி என்பவர் மிகச் சிறந்தவர். அவரது அவையில் புலவர்கள் மிக்கிருந்தனர். அவர் பெரும்பொழுதைப் புலவர்களோடு கழித்தார். கடிகை முத்துப் புலவர் என்பவர் அவரது உள்ளம் கவர்ந்த பெரும்புலவர். அவர் தமிழ் நூல்களை நன்கு கற்ற பேரறிஞர். ஜமீந்தார் அவரிடம் மிக்க மதிப்புக் கொண்டிருந்தார்.

## உமறுப் புலவர்

எட்டையபுரத்தில் செய்க்கு முகம்மதலி என்று ஒரு பெரியவர் இருந்தார். அப் பெயர் பொது மக்கள் உச்சரிப்பால் 'சேக்கு முதலி' என்று மருவியது; பின்பு 'சேக்கு முதலியார்' என்று

நீண்டது. அப்பெரியார் சவ்வாது முதலிய நறுமணப் பொருள்களை விற்றுவந்தார். அவர் தமிழறிவு மிகுந்தவர்; அதனால் கடிகை முத்துப் புலவருடன் நெருங்கிப் பழகினார். சேக்கு முதலியாருக்கு உமறு என்னும் பெயர் கொண்ட செல்வ மகனார் ஒருவர் இருந்தார். அவர் திண்ணைப் பள்ளியில் படித்து வந்தார்.

ஒரு நாள் மாலையில் சேக்கு முதலியாரும் கடிகை முத்துப் புலவரும் ஜமீந்தார் அவையிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தனர். அப்போது சிறுவராகிய உமறு திண்ணைப் பள்ளியிலிருந்து வீடு நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். புலவர் சிறுவரது அழகில் ஈடுபட்டார். அவரது முகத்தோற்றம் அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. அவர், "இச் சிறுவன் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று முதலியாரைக் கேட்டார். முதலியார் புன்முறுவலுடன் புலவரை நோக்கி, "அவன் தான் என் பிள்ளை", என்று பதில் கூறினார். புலவர், "இனி அவன் என்னிடமே கல்வி கற்கட்டும்", என்று கூறினார். தந்தையார் முகம் மலர்ந்தது.

மறுநாள் உமறு, புலவர் வீடுசென்றார்; அவரைப் பணிந்தார். புலவர் அச்சிறுவரை அன்போடு வாரி அணைத்துக்கொண்டார்; அன்று முதல் அவருக்கு முறையாகத் தமிழ்நூல்களைக் கற்பிக்கலானார். உமறு ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் புலவரிடம் கல்வி கற்றார்; தமது பதினான்காம் வயதிற்குள் கவி பாடும் ஆற்றல் பெற்றார்; பலர் முன்னிலையில் அஞ்சாமல் பேசும் திறமையையும் பெற்றார்.

## வாலை வாருதி

வாலை வாருதி என்பவர் வட மொழியும் தென் மொழியும் நன்கு படித்த பெரும்புலவர்; சிறந்த பேச்சாளர்; வாதத்தில் வல்லவர். அவர் பல ஜமீன்களுக்கும் சென்று, அங்கங்கு இருந்த புலவர் பெருமக்களை வாதத்தில் வென்றவர்; பல பேரரச ரிடமும் சிற்றரசரிடம் பரிசுகளும் பட்டங்களும் பெற்றவர். அவர் மந்திரம் தந்திரம் முதலியவற்றி லும் வல்லவர். அவரது புகழ் தென்னுடெங்கும் பரவியது.

அவர் ஒரு நாள் எட்டையபுரச் சமீன் அவைக்கு வந்தார். அன்று கடிகைமுத்துப் புலவர் அங்கு இல்லை. சமீந்தார் ஒரு நாளைக் குறிப்பிட்டு; அந்த நாளில் வந்து தமது அவைப் புலவரிடம் பேசலாம் என்று கூறினுர். வாலை வாருதி சமீந்தார் ஆதரவில் தங்கியிருந்தார். சமீந்தார் குறிப்பிட்ட நாள் வந்தது. புலவர், "வாலை வாருதி தமிழைப் பற்றி எது கேட்டாலும் நாம் பதில் சொல்லலாம்; மந்திர வித்தையைப் பற்றிக் கேள்வி கேட்டால் நாம் பதில் சொல்ல முடியாதே! அப்போது அவையோர் நம்மைப் பற்றி என்ன நினைப்பர்! அங்குச் சென்று அவமானம் அடைவதைவிட, நமக்கு உடல்நல மில்லை என்று கூறிப் போகாதிருத்தலே ஏற்றது", என்று தம்முள் எண்ணினுர்; அவ்வாறு தாம் செல்லாதிருத்தல் சமீந்தாருக்கு வருத்தத்தை உண்டாக்குமே என்றும் கவலைகொண்டார்.

அப்போது புலவரை அழைத்துச் செல்லச் சமீந்தார் அனுப்பிய பல்லக்கு வந்தது. புலவர்

மனம் குழம்பினர். அவ்வமயம் இளைஞராகிய உமறு அங்கே வந்தார்; ஆசிரியரது முகத்தைப் பார்த்தார்; அவரது முகவாட்டத்திற்குக் காரணத்தை அறிந்துகொண்டார். அவர் சிறிதும் அஞ்சாமல், ஆனால் பணிவாக, "ஆசிரியரே, உங்களுக்குப் பதிலாக நான் அவைக்குச் செல்வேன்; வாலை வாருதியை வெல்வேன்", என்று கூறினர்.

அதுகேட்ட ஆசிரியர் திடுக்கிட்டார்; "தம்பீ, வாலை வாருதி எங்கும் புகழ்பெற்றவர்; மிகச் சிறந்த அறிஞர். அவர் கல்விக் கடல்; மந்திர தந்திரங்களிலும் வல்லவர். சிறுவனாகிய நீ அவரை வெல்லுதல் அரிது", என்று கூறினர். உமறு ஆசிரியரைப் பணிந்து, "என்னை ஆசீர்வதித்து விடை கொடுங்கள். நான் சென்று வென்றுவருவேன். இறைவன் நமக்குத் துணை", என்று கூறினர். ஆசிரியர் அவரது அஞ்சாமையைப் பாராட்டினர். அவர் வெல்வார் என்பது புலவர் உள்ளத்தில் தோன்றியது. அவர் உமறுவை ஆசீர்வதித்து அனுப்பினர்.

## அவையில் உமறு

உமறு பல்லக்கில் ஏறி அவையை அடைந்தார். அவையில் திரளான மக்கள் கூடியிருந்தனர். சமீந்தார் தம் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். கடிகைமுத்துப் புலவருக்குத் தனி ஆசனம் போடப்பட்டிருந்தது. வாலைவாருதி ஓர் ஆசனத்தில் அமர்ந்திருந்தார் சமீந்தார் ஆவலோடு பல்லக்கை நோக்கினர். பல்லக்கிலிருந்து உமறு வெளிப்பட்டார். அவர் மிடுக்கோடு நடந்து வந்து

சமீந்தாரை வணங்கினர்; "பெருமானே, என் ஆசிரியருக்கு உடல்நலமில்லை. ஆதலால் அவரை வேண்டிக்கொண்டு யான் இங்கே வந்தேன். அவசியம் நேருமாயின், நான் வாலைவாருதி என்னும் பெரியாருடன் வாது செய்வேன்", என்று கூறினர்.

உமறு கூறியதைக் கேட்ட சமீந்தார் உள்ளம் கொதித்தார்; புலவர் தம்மை அவமானப்படுத்தி விட்டதாகவே கருதினர். ஆயினும் அவர் தம் சீற்றத்தை வெளிக்காட்டவில்லை. உமறு தம் ஆசிரியர்க்கு உரிய ஆசனத்தில் அமர்ந்தார். அப்போது சமீந்தார் வாலைவாருதியை நோக்கி, "எனது அவைப் புலவரான கடிகைமுத்துப் புலவர் உடல்நலக் குறைவால் வர இயலவில்லை. ஆதலால் அவருடைய மாணவர் இங்கு வந்துள்ளார். நீங்கள் உங்கள் பேச்சைத் தொடங்கலாம்", என்று கூறினர்.

வாலைவாருதி உமறுவைப் பார்த்தார். உமறு அவரை முறைத்துப் பார்த்தார். வாலைவாருதி, "இச் சிறுவன் நம்மைக் கிள்ளுக்கீரை என்று எண்ணிவிட்டான் போலும்! இவனைத் தக்கவாறு அவமானப்படுத்தவேண்டும்," என்று எண்ணினர்; பின்பு பேசத் தொடங்கினர்; "என்னை வாலைவாருதி என்று அறியாயோ பிள்ளாய்", என்று உமறுவை நோக்கி உறுமினர்.

உமறு இச் சொற்களைக் கேட்டனர். அவர் விழிகள் சிவந்தன. தமது வயதைக் கருதி அவர் "பிள்ளாய்" என்றழைத்தது உமறுவுக்குப் பிடிக்க

வில்லை; 'இறைவன் அருளினால் உன்னை வெல்வேன்' என்று தம்முள் கூறிக்கொண்டார்; 'பின்பு தாம் நாடறிந்த புலவர், தாம் குழறினால் அண்டமுகடும் படீரெனும், இதை எண்ணி அஞ்ச வேண்டும்' என்ற கருத்தமைந்த செய்யுள் ஒன் றைப் பாடினார்; அதன் இறுதியில் "பீளாய்" என் னும்சொல்லால் வாலைவாருதியை மட்டம் தட்டினார்.

## உமறுவின் வெற்றி

உமறு பாடிய செய்யுளைக் கேட்ட அனைவரும் அயர்ந்துவிட்டனர். சமீந்தார் உமறுவை வியப் போடு பார்த்தார்; "சிறுவன் கெட்டிக்காரன்" என்று எண்ணினார். வாலைவாருதி மனம் குழம்பி னார்; "இச் சிறுவன் நிறைந்த புலமை இல்லாவிடின் நம்மைக் கண்டு அஞ்சியிருப்பான்; இவ்வளவு ஆணவத்துடன் நம்மை மதியாமல் பாடியிரான். எனவே, இவன் உண்மையில் திறமைசாலியே. இவன் என்னென்ன படித்திருக்கிருனோ தெரிய வில்லை. இவனே இப்படி இருந்தால், இவனுடைய ஆசிரியர் எப்படி இருப்பார்? அவர் வராமல் இருந் ததே நல்லது", என்று தம்முள் எண்ணினார்.

உடனே வாலைவாருதி எழுந்து உமறுவிடம் சென்றார்; உமறுவை மார்புறத் தழுவினார்; "தம்பீ, உனது திறமையைப் பாராட்டுகிறேன். நீ சிறந்த கல்விமான்", என்று புகழ்ந்து பேசினார். பிறகு அவர் சமீந்தாரைப் பார்த்து, "பெருமானே, கடிகைமுத்துப் புலவர் பேரறிஞர் என்பது இம் மாணவரைக் கொண்டே தெரிந்துகொள்ளலாம்.

இவர்களை ஆதரித்து வரும் உங்கள் பெருந்தன்மை யைப் பாராட்டுகிறேன். இத்தகைய புலவர் பெரு மக்களைத் தேர்ந்தெடுத்த உங்கள் திறமை போற்றத் தக்கது'', என்று மொழிந்தார்.

சமீந்தார் வாலைவாருதியின் பாராட்டுரையைக் கேட்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தார்; வாலை வாருதிக்கு வேண்டும் பரிசுகளை வழங்கினார்; உமறுவை வாழ்த்தினார்; அவருக்கும் பரிசுகள் நல்கி மகிழ்ந்தார்.

## உமறு - அவைப்புலர்

கடிகைமுத்துப் புலவர் சில ஆண்டுகளுக்குப் பின், முதுமை அடைந்து ஓய்வு பெற்றார். அவரது மாணவரான உமறுப்புலவர் தமது ஆசிரியரிடத்தில் அமர்ந்தார். அவர் தம் இனிய பாடல்களாலும் கம்பீரமான பேச்சாலும் சமீந்தார் உள்ளத்தைக் கவர்ந்தார். முஸ்லிம் புலவர் ஒருவர் இந்து சமீந் தாரிடம் புலவராயிருத்தல் முஸ்லிம்களுக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது. இந்துக்கள் உமறுவின் புலமையைப் பெரிதும் பாராட்டினர்.

## புராணம் பாடுதல்

அக்காலத்தில் இராமநாதபுரத்தை அடுத்த கீழைக்கரை என்னும் ஊரில் செய்கப்துல் காதிர் என்னும் பெரியார் இருந்தார். அவர் தமிழறிவு மிக்கவர்; தமிழ்ப் புலவர்களை வரவேற்று உபசரிப்ப தில் ஆர்வம் கொண்டவர். அவரது பெயர் சீதக்காதி என்று பொது மக்களால் வழங்கப்பட்டது. அப் பெரியார் இராமநாதபுர அரசர்க்கு நெருங்கிய

நண்பராயிருந்தார். அவர் நபிநாயகத்தின் வரலாற்றை ஒரு தமிழ்க் காவியமாக்க வேண்டும் என்று விரும்பினார்.

சீதக்காதி, உமறுவின் பேராற்றலைக் கேள்விப் பட்டார்; தாம் நினைக்கும் பெருநூலைப் பாடவல்லவர் உமறுப் புலவரே என்று துணிந்தார். பின்பு அவர் எட்டையபுரம் சென்று அரசரையும் புலவரையும் கண்டார்; அவர்களோடு அளவளாவினார்; மூன்று திங்கள் கழித்துப் புலவரைக் கீழைக்கரைக்கு வருவித்தார்; நாயகத்தின் வரலாற்றை ஒரு காவியமாகப் பாடித் தரவேண்டும் என்று வேண்டினார். உமறுப் புலவர், "இறைவன் திருவுள்ளப்படி உங்கள் கருத்து நிறைவேறும்", என்று மகிழ்ச்சியோடு கூறினார்.

## சீறாப் புராணம்

உமறுப் புலவர் முஸ்லிம் பெரியார் பலரிடம் நபிநாயகத்தின் வரலாற்று விவரங்களை நன்கு கேட்டுத் தெளிந்தார்; பின்பு அமைதியாக இருந்து, நூல் பாடத் தொடங்கினார்; தமது புலமைத்திறன் முழுமையையும் காட்டி நூலைப் பாடி முடித்தார்; அதற்குச் சீறாப்புராணம் என்று பெயரிட்டார்.

சீறாப் புராணம் 47 பாடல்களை உடையது; 2683 செய்யுட்களைக்கொண்டது. இந்நூல் செய்யுட்கள் உமறுப் புலவரின் புலமையை நமக்குத் தெரிவிக்கின்றன. நீங்கள் மேல் வகுப்புக்களில் இந்நூற் செய்யுட்களைப் படித்து மகிழ்வீர்கள்.



# 9. வீரமாமுனிவர்

## மேனாட்டுப் பாதிரிமார்

கிறித்தவ சமயம் அன்பை அடிப்படையாகக் கொண்டது. அச்சமயம் உலக நாடுகளில் பரவுவதற்குக் கிறித்தவப் பாதிரிமாரே காரணராவர். அவர்கள் உலகத்தின் பல நாடுகளிலும் தங்கினர்; மக்களுக்குக் கல்வி வசதி அளித்தனர்; மருத்துவ உதவி அளித்தனர்; இவ்விரண்டோடு சமய அறிவுரைகளும் அளித்தனர். பாதிரிமார் செய்த இத் தொண்டுகளால் அவர்களின் சமயம் ஒவ்வொரு நாட்டிலும் வளர்பிறை போல வளர்ந்தது.

பாதிரிமார் நமது தமிழ் நாட்டுக்கும் வந்தனர்; நமது தாய்மொழியைக் கற்றனர்; தமிழில் பேசத்

தங்கள் சமயக் கொள்கைகளைப் பரப்பினர். சிலர் அத்துடன் அமையாது, பள்ளிகளை அமைத்துக் கல்வித் தொண்டு புரிந்தனர்; நம் தமிழ்நூல்களை விடாமல் பல ஆண்டுகள் படித்துப் பெரும்புலமை அடைந்தனர்; திறக்குறள் போன்ற நூல்களைத் தத்தம் மொழிகளில் எழுதினர்; தமிழ் நூல்களின் சிறப்பையும் தமிழ்மொழியின் சிறப்பையும் ஆராய்ந்து நூல்கள் வெளியிட்டனர். அத்தகைய மேனாட்டுத் தமிழறிஞருள் முதன்மையானவரே வீரமாமுனிவர் என்பவர்.

## இளமையும் சமயப்பயிற்சியும்.

வீரமாமுனிவர் இத்தாலி நாட்டினர். அவர் இயற் பெயர் கான்ஸ்டென்டைன் ஜோசபு பெஸ்கி என்பது. அவர் கி. பி. 1680 இல் பிறந்தார். நற்குடியில் பிறந்த அவர், இளமைமுதலே கல்வியில் கருத்தூன்றினார்; ஏசுநாதரின் அறிவுரைகளில் கருத்தைக் செலுத்தினார்; அப்பொன் மொழிகளைப் பிற நாட்டு மக்களுக்குக் கூறி அவர்களை நல்வழிப் படுத்த விரும்பினார். பிற நாடுகளில் சமயப்பணி புரியவேண்டும் என்னும் ஆர்வம் அவருக்கு இளமையிலேயே உண்டாயிற்று.

அவர் தமது பதினெட்டாம் வயதில் சமய சங்கத்தில் சேர்ந்தார்; இரண்டாண்டுகள் சமயப் பயிற்சி பெற்றார்; பின்பு நான்காண்டுகள் ஆசிரியராய்ப் பணியாற்றினார்; அப்போது பிரெஞ்சு, கிரீக்கு எபிரேயம், போர்ச்சுகீசியம் ஆகிய மொழிகளைக் கற்றார்.

பெஸ்கி ஆசிரியர் தொழிலை வெறுத்தார்; சமயப் பணி புரிய ஆவல்கொண்டார்; அதனால் 1706 முதல் நான்காண்டுகள் சமய நூல்களைப் பயின்றார்; இறுதியில் "குரு" என்னும் பட்டமும் பெற்றார்; சங்கத்தலைவர் பெஸ்கியின் விருப்பப்படி அவரைத் தமிழ் நாட்டிற்குப் பாதிரியாக அனுப்பினார். பெஸ்கி 1710 ஆம் ஆண்டு தமது முப்பதாம் வயதில் கொச்சித் துறைமுகத்தில் இறங்கினார்; அம்பலக் காடு என்னும் இடத்தை அடைந்தார். அவ்விடத்தில் குருமார்க்குச் சமயப் பயிற்சி அளிக்கும் சமயக்கல்லூரி ஒன்று இருந்தது. அவர் அங்கு ஒரு திங்கள் இருந்து பயிற்சி பெற்றார்; பின்பு கரையோரமாகவே நடந்து பாண்டிய நாட்டை அடைந்தார்; காமநாயக்கன் பட்டி என்னும் ஊரில் தங்கித் தமது சமயத்தொண்டைத் தொடங்கினார்.

## அக்கால நிலை

பெஸ்கி தமிழகம் வந்த காலத்தில் ஆர்க்காட்டு நவாபுவின் ஆட்சி நடைபெற்று வந்தது. நாட்டில் சிற்றரசர் பெருகியிருந்தனர். அவர்களை அடக்கத் தக்க பேரரசன் இல்லை. அதனால் அவர்கள் ஒருவரோடொருவர் போரிட்டனர். மகாராட்டிரர்களும், முஸ்லிம்களும் அடிக்கடி படையெடுத்தனர். வலிமை மிகுந்த கூட்டத்தார் பொது மக்களைக் கொள்ளையடித்துத் துன்புறுத்தினர். நாட்டில் அமைதி நிலைத்திருக்க வழியில்லை.

அக்காலத்தில் போர்ச்சுகீசியர் பாண்டிய நாட்டில் வாணிகம் செய்தனர். அவர்களைச் சேர்ந்த

குருமார் அந்நாட்டில் கிறித்தவ சமயத்தைப் பரப்பி வந்தனர். கிறித்தவ சமயத்தைச் சேர்ந்த தமிழ் மக்களைப் பிற தமிழர் வெறுத்தனர்; அவ்வெறுப் பினால் அவர்களுக்குப் பல இடையூறுகளைச் செய் தனர். சிற்றரசர் சிலரும் கிறித்தவ சமயத்தை எதிர்த்தனர். இத்தகைய துன்பநிலையிலும் பாதிரி மார் மிக்க பொறுமையுடன் தம் சமயப் பணியை ஆற்றிவந்தனர்.

## பெஸ்கியின் சமயத்தொண்டு

பெஸ்கி நுண்ணறிவு மிக்கவர். ஆதலால் அவ தமிழ்மக்களின் மதிப்பைப் பெறத் தமிழைக் கற்றார்; தமிழிலேயே சமய போதனை செய்யலானார்; தமிழ ரைப்போலவே உடை உடுத்தினார்; மரக்கறி உணவையே உட்கொண்டார்; மரப்பாதுகையை அணிந்துகொண்டார்; தைரியநாதர் (வீரமாமுனி வர்) என்று தம்பெயரை மாற்றிக்கொண்டார். அவர் இங்ஙனம் பேச்சாலும், உணவாலும், உடையாலும், பெயராலும் தமிழரானார்; தம்மை நாடிவந்த மக்களி டம் மிகுந்த அன்புடன் பேசினார்.

அவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குருக்கள் பட்டியில் சிறிதுகாலம் தொண்டு கசய் தார். அப்போது அங்குப் படையெடுத்து வந்த முஸ் லிம்களாலும், அப்பகுதியை ஆண்ட பாளையக்கார ராலும் அவர் அடைந்த இன்னல்கள் பல.

பின்பு அவர் காவலூருக்கு மாற்றப்பட்டார். அது தஞ்சைமாவட்டத்தில் கொள்ளிடக்கரையில் இருக் கிறது. தஞ்சை மாட்டத்தில் தஞ்சை மன்னரது

கொடுமைக்கு ஆளான கிறித்தவர் அவ்வூரை அடைக்கலமாகக் கொண்டனர். நமது வீரமா முனிவர் காவலூரில் ஒரு மாதாகோயிலை எடுப்பித்தார்; அக்கோவிலில் மாரியம்மையாரின் அழகிய உருவத்தை அமைத்தார்; அவ்வூருக்கு அடைக்கல மாக வந்த மக்களைக் காக்கும் தாய் என்னும் பொருளில் அவ்வம்மையாருக்கு ‘அடைக்கல மாதா’ என்று பெயரிட்டார்; துன்புற்ற அவ்வூர் மக்களுக்கு ஆதரவு கூறினர்; மாதாவை நம்பும்படி அறிவுரை கூறினர்; அடைக்கல மாதாவின்மீது அடைக்கல நாயகி வெண்கலிப்பா, அடைக்கலமாலை, திருக் காவலூர்க்கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி என்னும் நூல்களைப் பாடினர்.

பின்பு முனிவர்தென்னார்க்காடுமாவட்டத்தைச் சேர்ந்த ‘கோனன் குப்பம்’ என்னும் சிற்றூரை அடைந்தார். அங்கிருந்த கிறித்தவர் பிறர் தொல்லையால் மனச்சோர்வு அடைந்திருந்தனர். முனிவர் வீடு வீடாகச் சென்றார்; தமது அன்புரையால் அவர்களது சோர்வை அகற்றினர்; ஊரார் ஒத்துழைப்புடன் ஒரு மாதா கோவிலைக் கட்டினர்; தமிழ்நாட்டு மாதரைப்போல உடை அணிந்து ஏசுநாதராகிய மகவைத் திருக்கைகளில் ஏந்திய கோலத்தின் அன்னையின். உருவத்தை அமைத்தார்; அந்த அன்னைக்குப் “பெரியநாயகி” என்று பெயரிட்டார்; அவ்வன்னைக்கு முன்பிருந்து வழிபட்டார். அவருடைய செயல்கள் ஊர் மக்களை இன்புறுத்தின.

பின்னர் முனிவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஆவூரில் சிறிது காலம் தங்கியிருந்தார்.

அப்போது (1732-இல்) சோழநாடு போர்க்களமாக விளங்கியது. ஆவூர் மக்கள் அப்போரில் பாதிக்கப்பட்டனர். முனிவர் படைத்தலைவர்களைக் கண்டு ஆவூர் மக்களைத் துன்புறுத்தாதபடி வேண்டிக் கொண்டார்.

அக்காலத்தில் தென்னாட்டில் சந்தாசாகிபு குறிப்பிடத்தக்க வீரராய் இருந்தார். முனிவர் அவருடன் நட்புக்கொண்டார். முனிவருடைய சிறந்த ஒழுக்கமும், அருள் ஒழுகும் திருவுருவமும் சந்தாசாகிபின் உள்ளத்தைக் கவர்ந்தன. அவர் முனிவரையும் அவரைச் சேர்ந்த பாதிரிகளையும் தமிழ் நாட்டில் சமயப் பிரசாரம் செய்ய அநுமதி அளித்தார்.

1738 முதல் 1740 வரையில் மகாராட்டிரர்க்கும் முஸ்லிம்களுக்கும் தமிழகத்தில் போர் நடந்தது. அப்போது முனிவர் தூத்துக்குடியில் இருந்தார்; 'மணப்பாடு' முதலிய கடற்கரை ஊர்களில் சமயத்தொண்டு செய்தார். பின்பு மலையாளநாட்டு 'அம்பலக்காடு' என்னும் ஊரை அடைந்தார்; அங்கு இருந்த சமயக் கல்லூரியின் கண்காணிப்பாளருள் ஒருவராய் 1746 இல் நியமனம் பெற்றார். அப்போது அவருக்கு வயது அறுபத்தாறு. முனிவர் அங்குப் பல நூல்களை எழுதி முடித்தார்; அங்குத் தம் அறுபத்தேழாம் வயதில் இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

## முனிவரது தமிழ்த்தொண்டு

வீரமாமுனிவர் முப்பத்தேழு ஆண்டுகள் தமிழகத்தில் இருந்தார்; அக்காலம் தமிழக வரலாற்றில்

அமைதியற்ற காலம்—குழப்பம் நிறைந்த காலம் என்பது முன்பே கூறப்பட்டனவன்றோ? அக்குழப்ப காலத்தில் கிறித்தவர்க்கு ஏற்பட்ட இன்னல்கள் பல. வீரமாமுனிவரே பல துன்பங்கட்கு ஆளானார். அத்தகைய துன்பம் நிறைந்த காலத்தில் வீரமா முனிவர் பல சிற்றூர்களுக்குச் சென்று சமய அறிவுரை புகன்றார், பல கோவில்களைக் கட்டினார் என்பன பாராட்டத்தக்க செயல்கள் அல்லவா?

அவர் இவற்றோடு நிற்கவில்லை; தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை நன்கு கற்றார்; கவிபாடும் ஆற்றல் பெற்றார். திருக்காவலூர் அடைக்கல மாதாவின்மீது முன்சொல்லப்பட்ட செய்யுள் நூல்களைச் செய்தார். கித்தேரி அம்மாள் என்பவர் போர்ச்சுகீசிய நாட்டுப் பெண்மணியாவார். அவர் சமயத் துறையில் தொண்டு செய்து புகழ்பெற்றவர். முனிவர் அவ்வம்மையார்மீதும் ஒரு சிறுநூலைப் பாடினார். அதன்பெயர் கித்தேரி அம்மாள் அம்மானை என்பது.

முனிவர் சாதாரண மக்களும் படிப்பதற்காகப் பரமார்த்த குரு கதை என்னும் பெயரில் ஓர் உரைநடை நூலை எழுதினார்; கிறித்தவ சமய உபதேசிகளுக்காக வேதியர் ஒழுக்கம் என்னும் உரைநடை நூலை எழுதினார்; கிறித்தவ வேதத்தின் கருத்துக்களை அனைவரும் படித்து அறிவதற்காக வேதவிளக்கம் என்னும் உரைநடை நூலை எழுதினார். இம்மூன்று உரைநடை நூல்களும் ஆங்கிலம் முதலிய பலமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன.

நாம் இன்று தமிழகராதி நூல்களைப் பயன்படுத்துகிறோம் அல்லவா? இத்தகைய அகராதி நூல்

கள் வீரமாமுனிவர் காலத்தில் இல்லை. அவர் மேல் நாட்டு முறையைத் தழுவி அகராதி ஒன்றை வெளியிட்டார். பின்பு அவர் தமிழ்-இலத்தீன் அகராதி ஒன்றையும் வெளியிட்டார். அதில் ஒன்பதினாயிரம் தமிழ்ச் சொற்களும், இலத்தீன் மொழியில் பொருள் விளக்கமும் காணப்படுகின்றன. இலத்தீன் மொழியில் வல்ல மேனாட்டவர் தமிழைக்கற்க அந்நூல் உதவி செய்தது. முனிவர் போர்ச்சுகீசியம்-தமிழ்-இலத்தீன் அகராதி ஒன்றையும் வெளியிட்டார். அந்நூலில் நான்காயிரம் போர்ச்சுகீசியச் சொற்களுக்குத் தமிழிலும் இலத்தீனிலும் பொருள் தரப்பட்டுள்ளது.

வீரமாமுனிவர் தமது திருக்குறளை நன்கு பயின்றார்; அதன் ஏற்றத்தை நன்கு உணர்ந்தார்; அதன் பயனை ஐரோப்பியரும் அநுபவிக்கவேண்டும் என்று விரும்பினார். அதனால் அப்பெரியார் திருக்குறளில் உள்ள அறத்துப்பால், பொருட்பால் என்னும் இரண்டு பகுதிகளையும் இலத்தீன் மொழியில் பெயர்த்தெழுதினார். இங்ஙனம் நமது திருக்குறளை முதல்முதல் மேனாட்டவர்க்கு அறிமுகம் செய்து வைத்த பெரியார் வீரமாமுனிவரேயாவர்.

முனிவர் தமிழ் இலக்கணத்திலும் வல்லவர். அவர் தமிழிலக்கணச் செய்திகளைக் காலத்திற்கு ஏற்ற முறையில் எளிய நடையில் ஒரு நூலாக வெளியிட்டார். அதன் பெயர் தொன்னூல் விளக்கம் என்பது. அவர் தமிழிலக்கணத்தை இலத்தீன் கற்றவர் அறிந்துகொள்ளும்படி இலத்தீன் மொழியில் ஓர் இலக்கண நூலை எழுதினார். அப்பெரியார் உலக வழக்கில் அமைந்த தமிழ் மொழியின் இலக்

கணத்தை ஆராய்ந்து, கொடுந்தமிழ் இலக்கணம் என்னும் நூலை இலத்தீன் மொழியில் வெளியிட்டார். இந்நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. தமிழகம் வந்த மேனாட்டார்க்கு இந்நூல் மிகுதியாகப் பயன்பட்டது. இதனைப்படித்த அவர்கள் தமிழ்ப் பொதுமக்களிடம் எளிதாகத் தமிழில் பேசினர்.

முனிவர் காலத்தில் நமது நாட்டில் பனைஓலை நூல்களே இருந்தன. எ, ஒ என்பன குற்றெழுத்துக்கள் அல்லவா ? அக்கால மக்கள் அவற்றின்மீது புள்ளிவைத்து ஏ, ஓ என்று படித்து வந்தனர். வீரமாமுனிவர் அப்புள்ளிகளை நீக்கினார்; இன்று நாம் எழுதுவதுபோல ஏ, ஓ என்று மாற்றம் செய்தார்; அவர் மாற்றியபடியே இன்று நாம் அவ்விரண்டு எழுத்துக்களையும் எழுதி வருகின்றோம்.

## தேம்பாவணி

வீரமாமுனிவர் தமிழ்ப் பெருங் காப்பியங்களாகிய சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம், கம்பராமாயணம் ஆகிய நூல்களை நன்கு படித்தவர். சிந்தாமணி சமணகாவியம்; சிலப்பதிகாரம் சமணகாவியம்; மணிமேகலை பௌத்த காவியம்; கம்பராமாயணம் வைணவ காவியம்; பெரியபுராணம் சைவகாவியம். அவர் அக்காவியங்களைப்போலவே தாம் ஒரு காவியம்பாட விழைந்தார்; ஏசுநாதரின் வளர்ப்புத் தந்தையாராகிய சூசையப்பரது வரலாற்றை ஒரு காவியமாகப் பாடி முடித்தார். அதன்பெயர் தேம்பாவணி என்பது.

தேம்பாவணி முப்பத்தாறு படலங்கள் உடையது. மூவாயிரத்து அறுநூற்றுப்பதினைந்து செய்யுட்களைக்கொண்டது. இந்நூல் இனியதமிழ்ச் செய்யுட்களைப் பெற்றது; படிக்கப்படிக்கச் சுவை தருவது. நீங்கள் மேல் வகுப்புக்களில் இந்நூற்செய்யுட்களைப் படித்து மகிழலாம். நமது தமிழின் சிறப்பை மேனாட்டார்க்கு உணர்த்திய வீரமாமுனிவரை நாம் மறத்தல் இயலுமோ?



# 10. பாரதியார்

## இளமைப் பருவம்

இந்த நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த பெரும் புலவர் சுப்பிரமணிய பாரதியார் 1882-ஆம் ஆண்டில் பிறந்தார். அவர் தந்தையார் பெயர் சின்னசாமி ஐயர் என்பது; தாயார் பெயர் இலக்குமி என்பது. சின்னசாமி ஐயர் எட்டையபுர சமீனில் வேலை பார்த்தார். அவர் நல்லொழுக்கம் மிகுந்தவர்.

பாரதியார் வளர்பிறை போல வளர்ந்து வந்தார். அவருக்கு ஐந்து வயது நிரம்புவதற்குள் அவருடைய அருமைத்தாயார் காலமானார். தந்தையார் வேறொரு பெண்மணியை மணம் செய்துகொண்டார். அந்த அம்மையார் பாரதியாரையும் அவர் தங்கையையும் அன்போடு வளர்த்துவந்தார். பாரதியார் தொடக்கத்தில் தந்தையாரிடமே கல்வி கற்றார்; அண்ணாமலை ரெட்டியார் பாடிய காவடிச்சிந்து

அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. அவர் அந்நூற் பாடல்களை இன்னிசையுடன் பாடிப்பாடி மகிழ்ந்தார்; பசுமை நிறைந்த வயல்கள், நீல நிற வானம் முதலிய இயற்கைக் காட்சிகள் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

பாரதியார் சொந்தமாகச் சில பாடல்களைப் பாடத் தொடங்கினார்; அவற்றைத் தம் போன்ற மாணவரிடம் பாடிக்காட்டி மகிழ்ந்தார். அவருடன் இளமையிலிருந்து பழகிய மாணவருள் ஒருவரே டாக்டர் சோமசுந்திர பாரதியார் என்ற தமிழ்ப் பேராசிரியர்.

பாரதியார் திருநெல்வேலியில் ஆங்கிலப் பள்ளியில் சேர்க்கப்பட்டார்; அங்குச் சிறிது காலம் கல்வி பயின்றார். அவருக்குப் பன்னிரண்டு வயதிற்குள் திருமணம் செய்யப்பட்டது. அவருடைய மனைவியார் பெயர் செல்லம்மாள் என்பது. பின்பு சின்னசாமி ஐயர் நோய்வாய்ப்பட்டு அடுத்த ஆண்டில் இறந்தார். தந்தையார் இறந்ததால் குடும்பத்தில் வறுமை நோய் தலைகாட்டியது.

பின்பு பாரதியார் காசிக்குச் சென்று தம் அத்தை இல்லத்தில் தங்கினார்; அங்கு ஒரு பள்ளியில் சேர்ந்து இந்தியையும் வடமொழியையும் கற்றார். அப்பொழுது அவர் எல்லாச்சாதி மக்களிடமும் மனம் கலந்து பழகினார். அவர் 1902-ஆம் ஆண்டு எட்டயபுரத்திற்குத் திரும்பினார்.

### சமீன் அவையில்

பாரதியார் அறிவைப் பாராட்டிய எட்டையபுரம் சமீந்தார் அவரைத் தம்மிடமே வேலை பார்க்

கும்படி நியமித்தார். சமீந்தாருக்குப் பெரியோர் நூல்களைப் படித்துப் பொருள் கூறுவது, செய்தித் தாள்களைப் படித்து முக்கியமான செய்திகளை எடுத்துக்கூறுவது. ஆங்கிலக் கவிதைகளைப் படித்து அவற்றின் சத்தை எடுத்துக் கூறுதல் முதலிய பணிகளில் அவர் ஈடுபட்டிருந்தார்.

பாரதியார் காலத்தில் நமது சமுதாயத்தில் சாதி வேறுபாடுகள் நிலைத்திருந்தன. ஒருவரை யொருவர் உயர்ந்தவர் என்றும் தாழ்ந்தவர் என்றும் எண்ணினர். ஒருவரை யொருவர் தொடவும் அஞ்சினர். படித்த பெண்களைக் காண்பதே அருமை. பெண்கல்வி மிகவும் பிற்போக்கான நிலையில் இருந்தது. பாரதியார் இவற்றைக் கவனித்து உள்ளம் வருந்தினர்; 'சாதி வேறுபாடுகள் ஒழியவேண்டும், பெண் கல்வி நாட்டில் பெருகவேண்டும், அப்பொழுதுதான் நம் சமுதாயம் முன்னேற முடியும்' என்று எண்ணினர். அந்த எண்ணம் அவர் உள்ளத்தில் வேரூன்றி நன்கு வளர்ந்தது.

ஒரு முறை பாரதியார் சமீந்தாருடன் சென்னை சென்றார். சென்னையில் இரண்டு புடைவைகள் வாங்கிவரும்படி அவருடைய மனைவியார் வேண்டிக்கொண்டார். ஆனல் பாரதியார், சமீந்தார் கொடுத்த பணத்தைக்கொண்டு தமக்கு வேண்டிய தமிழ் நூல்களையும் ஆங்கில நூல்களையும் வாங்கிக் கொண்டு ஊர் திரும்பினர்; 'அழியும் பொருளைக் கொண்டு அழியாத பொருளாகிய நூல்களை வாங்கி விட்டேன். புடைவையை வாங்கிவரவில்லை,' என்று மனைவியிடம் கூறினர்.

## பலதுறை அலுவல்

பாரதியார் மதுரையிலுள்ள சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் சிறிதுகாலம் தமிழாசிரியராய் இருந்தார்; பின்பு சென்னை சென்றார்; அங்குச் சுதேசமித்திரன் செய்தித்தாளுக்குத் துணை ஆசிரியராய் இருந்தார். அக்காலத்தில் இந்தியாவுக்கு உரிமை வேண்டும் என்று நாடெங்கும் கிளர்ச்சி நடந்து கொண்டிருந்தது. பாரதியார் அக் கிளர்ச்சியில் கலந்துகொண்டார்; அது பற்றி ஆவேசமாகக் கட்டுரைகள் வரைந்தார்; வீரச்சுவை பொருந்திய நாட்டுப் பாடல்களைப் பாடினார்.

பாரதியார் 1906-ஆம் ஆண்டு காசியில் நடந்த காங்கிரஸ் பேரவைக்குச் சென்றிருந்தார். பின்பு அவர் கல்கத்தா முதலிய இடங்களைக் காணச் சென்றார். அங்கு நிவேதா தேவி* என்ற ஆங்கில அம்மையாரைக் கண்டார். அவ்வம்மையார் விவேகானந்த அடிகளின் மாணவர்; வேதாந்த சாத்திரங்களில் வல்லவர். அவர் பாரதியாருக்குப் பல அறிவுரைகளை வழங்கினார்; பாரதியார் தமது மனைவியாரை அழைத்துக்கொண்டு வராததற்கு வருந்தினார்; "பெண் பிறப்பு பெருமையுடையது; பெண்களே நாட்டிற்கும் சமூகத்திற்கும் விளக்குப் போன்றவர்கள்; ஆடவரை நல்வழிப்படுத்துபவர்கள்" என்று வற்புறுத்திக் கூறினார். அவ்வம்மையார் கூறியவை அனைத்தும் பாரதியார் உள்ளத்தைக் கவர்ந்தன.

---

* இவர் 'நிவேதிதா' என்றும் கூறப்பட்டார்.

## புதுவையில் பாரதியார்

பாரதியாரின் உரிமைபற்றிய சொற்பொழிவுகள் சட்ட வரம்புக்கு மீறியவை என்று அரசாங்கம் எண்ணியது; அதனால் அவரைச் சிறைப்படுத்த விரும்பியது. சிறையுள் இருப்பதைவிட வெளியில் இருந்து தொண்டு செய்யலாம் என்று பாரதியார் கருதினார்; அதனால் ஆங்கிலேயர் கால் வைக்க முடியாத புதுச்சேரிக்குச் சென்றுவிட்டார். புதுச்சேரி பிரெஞ்சுக்காரர் ஆட்சிக்கு உட்பட்டது. அவர் புதுவையில் இருந்துகொண்டே தமது 'இந்தியா' என்ற செய்தித்தாளை நடத்திவந்தார். அப்பொழுது பாரதியாரைப் போலவே நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட அரவிந்த கோஷ் என்ற வங்காள அறிஞரும் புதுச்சேரியில் குடியேறினார். பாரதியார் புதுவையில் பலருடன் பழகினார்; அவர்களுடன் கலந்து பல நூல்களை ஆராய்ந்தார்; பல பாடல்களைப் பாடினார்.

## இறுதி வாழ்க்கை

ஆங்கில அரசாங்கத்தின் சீற்றம் தணிந்த பிறகு பாரதியார் புதுச்சேரியை விட்டு (1919-இல்) சென்னைக்கு வந்தார். பின்பு அவர் கடையம், எட்டையபுரம் முதலிய ஊர்களில் சிறிது காலம் தங்கினார்; இறுதியில் சென்னையில் குடியேறினார். 1920-ஆம் ஆண்டிலிருந்தே அவரது உடலில் நோய் கண்டது. அவர் 1921-ஆம் ஆண்டு

செப்டெம்பர் மாதம் 11-ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## சிறந்த கருத்துக்கள்

பாரதியார் விரிந்த சிந்தையும் பரந்த நோக்கமும் உடையவர். அவர் எல்லாச்சமயத்தவருடனும் மனம் கலந்து பழகினார்; அவர்களுடன் இருந்து உணவுண்டார். எல்லாச் சமயங்களும் கடவுள் உணர்ச்சியை ஊட்டுவனவே என்பது அவர் கருத்து. "மனித இனத்தில் சாதிகள் இல்லை, 'இவன் உயர்ந்தவன்-அவன் தாழ்ந்தவன்' என்று கூறுவது பாவம், எல்லோரும் இந்நாட்டு மன்னர், சமுதாயத்தில் பெண்கள் பெருமைப்படுத்தப்படல் வேண்டும், அவர்களும் கல்வி கற்றல் வேண்டும், நம் நாட்டில் எல்லாத் தொழில்களும் நடத்தப்படல் வேண்டும், நாம் எதற்கும் அயல்நாடுகளை எதிர் பார்த்தல் கூடாது. கடவுளிடத்தில் அழுத்தமான பற்றுத்தேவை" என்பன அவர் கொண்ட கருத்துக்கள். பாரதியார் இவ்வுயர்ந்த கருத்துக்களைத் தம் பாடல்களில் வற்புறுத்தியுள்ளார்.

## பாரதியார் தமிழ்ப்பற்று

பாரதியார் பாடல்களை நான்கு தலைப்புக்களில் பிரிக்கலாம். அவை உரிமை வேட்கைப்பாடல்கள், சமயப் பாடல்கள், சீர்திருத்தப் பாடல்கள், தமிழ் பற்றிய பாடல்கள் என்பன. பாரதியார் இந்திய நாட்டைப் பொதுவாகவும் தமிழ் நாட்டைச் சிறப்பாகவும் மதித்துவந்தார். இந்திய மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பது அவரது விருப்பம்.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே--இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே"

என்னும் இரண்டு அடிகள், அவரது தமிழ் நாட்டுப் பற்றை உணர்த்துகின்றன அல்லவா ?

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவதெங்கும் காணோம்"

என்னும் அடி, அவரது தமிழ்ப்பற்றை நன்கு விளக்குகிறது அன்றோ ?

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மைவெறும் புகழ்ச்சி இல்லை"

என்னும் அடிகளில் கம்பர், வள்ளுவர், இளங்கோ ஆகிய முப்பெரும் புலவர் போற்றப்பட்டிருத்தல் காணலாம். இம்மூன்றும் பாரதியாரது தமிழ்ப் பற்றை விளக்கப் போதிய சான்றுகளாகும்.

பாரதியார் பாடல்கள் சாதாரண மக்களும் படித்து உணரத்தகும் முறையில் இருக்கின்றன; மேலும், நமக்கு வேண்டும் அறிவுரையையும் உணர்ச்சியையும் ஊட்டுகின்றன. ஆதலால் மக்கள் அவற்றை விரும்பிப் படிக்கின்றனர்; அவற்றைப் பாடிய பெறும் புலவரை உளமாரப் பாராட்டுகின்றனர்; ஆண்டுதோறும் நாடெங்கும் விழாக் கொண்டாடுகின்றனர்.

பாரதியார் திருப்பெயர் வாழ்க !